Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00




# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் -12

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆவணி -02 | 18-08-2004 | புதன்கிழமை | ஓசை -182

## – படைகச் சோதனையிடப் புலிகள் மறுத்ததான –

# இராணுவத்தரப்பின் குற்றச்சாட்டு உண்மைக்குப் புறம்பானதொன்று!

## போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர்

**முல்லைத்தீவுக் கடற்பரப்பில் ஆயுதங்களை இறக்கிக்கொண்டிருந்த றோலர் படகைப் பார்வையிட முற்பட்ட இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரைத் தமிழீழ விடுதலைப்புலிகள் தடுத்ததாக சிறிலங்கா இரணுவம் தெரிவித்தமை உண்மைக்குப் புறம்பானதென போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் டொன்புறுவ்ஹொவ்டே தெரிவித்துள்ளார்.**

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் விடுதலைப்புலிகளின் றோலர் படகொன்றை படையினரும்,போர் நிறுத் தக் கண்காணிப்பு குழுவினரும் சோதனைசெய்ய முற்பட்ட போதும அதனை அவர்கள் அனுமதிக்க வில்லையென சிறிலங்காப் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கை செயலகம் தெரிவித்துள்ளது. நேற்றுப்பகல் இடம்பெற்ற இந்தச் சம்பவமானது போர் நிறுத்த மீறல் செயலாகுமெனப் படைத்தரப்பு, போர்நிறுத்தக்கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்தமை குறிப்பிடத்தக்கது.

முல்லைத்தீவு கடற்பரப்பில் விடுதலைப்புலிகள் றோலர் படகொன்றிலிருந்து ஆயுதங்களை இறக்குவதாக இராணுவம் கூறுகிறது. இது உண்மையா என பீ.பீ.சி கேட்ட போது இதற்குப் பதிலளித்த ஹொவ்டே என்ன கொண்டுவந்து இறக்கி னார்கள் என்பதுபற்றி எங்களுக்குத் தகவல் ஒன்றும் இல்லை.(12ஆம் பக்கம் பார்க்க)

## பதவிக்காலம் நீடிப்பு

சிறிலங்கா பொலிஸ்மா அதிபரின் பதவிக்காலம் நீடிக்கப்பட்டுள்ளது. பொலிஸ் மா அதிபர் இந்திரா டி சில்வாவின் பதவிக்காலம் இன்றுடன் முடிவடைகிறது. எனினும் விசேட ஏற்பாட்டின் படி சனாதிபதி அவரின் பதவியை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதி வரை நீடித்துள்ளார்

ஏற்கனவே இந்திரா டி சில்வாவின் பதவிக்காலம் நீடிக்கப்பட்ட அதேநேரம் அவருக்குப் பதிலாக அடுத்த பொலிஸ்மா அதிபரின் பெயர் இதுவரை வெளியாகவில்லை. (32)

## பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்களுடன் சந்திப்பு இல்லை

பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்களின் தொழிற் சங்கப் பிரதிநிதிகளுக்கும் சனாதிபதி தலமையிலான அமைச்சர் குழுவிற்கும் இடையில் நேற்று நடைபெறவிருந்த முக்கிய சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.இந்த சந்திப்பு இன்று காலை 10.00 மணிக்கு இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இச்சந்திப்பில் சனாதிபதியுடன் எரிபொருள் மின்சக்தி துறை அமைச்சர் சுசில் பிரேம ஜயந்தும் கலந்து கொள்வாரெனத் தெரிவிக்கப்படுகின்றது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் 33 வீதப் பங்குகளை இந்திய நிறுவனம் ஒன்றுக்கு அரசாங்கம் வழங்க முயற்சிப்ப தாக குற்றம் சுமத்தி கூட்டுத்தாபன ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுப்பட்டனர். இந்த நிலையிலேயே சனாதிபதியுடன் பேச்சு நடத்துவது என்ற உறுதி மொழியின் அடிப்படையில் ஊழியர்கள் நேற்று வரை தமது பணிப்புறக்கணிப்பைக் கைவிட்டனர். சனாதிபதியுடனான பேச்சுவார்த்தை தோல்வியடையும் (12ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான சூழ்நிலை குறைவடைந்து செல்கிறது

### - ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கும் சாத்தியம் மிகக் குறைவடைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அரசாங்கம் முன்வைக்கும் இடைக்கால நிர்வாக சபை யோசனைகள் தொடர்பான திட்டத்தை ஏற்றுக் கொள்ள முடியாதென விடுதலைப் புலிகள் அறிவித்தமையைத் தொடர்ந்து மீண்டும் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கும் சூழ்நிலை தற்போதைக்கு இல்லை என இராஜதந்திரத் தரப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

இதேவேளை அரசினதும் தமிழீழ விடுதலைப் புலிகளினதும் இடைக்கால நிர்வாகத் திட்ட வரைவுகளை முன்வைத்து ஏக காலத் (12ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானத்தை வலியுறுத்தி நோர்வே தூதரகம் முன் மறியல்

சமாதானத்தை வலியுறுத்தி நோர்வே தூதரகத்தின் முன்னால் நேற்று முன்தினம் சத்தியாகிரகம் ஒன்று இடம்பெற்றது . சௌமிய நிதியமும், வடக்கு தெற்கு சமாதான நிதியமும் இதனை ஏற்பாடு செய்திருந்தன. இந்த சத்தியாகிரகத்தைப் பிற்பகல் 3 மணியிலிருந்து ஒரு மணித்தியாலத்திற்கு மாத்திரம் நடத்த நோர்வே தூதரகம் அனுமதி வழங்கியிருந்தது. (32)

## சிறப்புச் செவ்வி உள்ளே...

மகளிர் படையணி 19ஆம் ஆண்டில் காலடி பதிப்பதை முன்னிட்டு பெறப்பட்ட சிறப்புச் செவ்வி உள்ளே...

## நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சரின் கொழும்பு விஜயம் ஒத்திவைப்பு

இந்த வாரம் கொழும்பு வரவிருந்த நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசனின் விஜயம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்தத் தகவலை கொழும்பிலுள்ள நோர்வே தூதரகத் தரப்புகள் தெரிவித்துள்ளன. எனினும் அதற்கான காரணம் எவையும் அறிவிக்கப் படவில்லை

தமிழீழ விடுதலைப்புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகாரம் தொடர்பில் சனாதிபதி பேச்சுவார்த்தைக்குத் தயாராக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டதை யடுத்தே நோர்வேப் பிரதி வெளியுறவு அமைச்சரின் வருகை இடம் பெறவிருந்தது

இதற்கிடையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் இடைக்காலத் தன்னாட்சிக்கு மாற்று யோசனை ஒன்றை அரசாங்கம் தயாரித்து வருவதான செய்தி மீண்டும் இந்த விடயத்தில் முரண்பாட்டை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள்ளும் படைகளை அனுப்பவேண்டிய நிலை ஏற்படுமாம்

### –சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா கூறுகிறார்

விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகள் நாட்டிற்கு அச்சுறுத்தலாக இருந்தால் விடுதலைப்புலிகளின் பகுதிக்குள் படையினன்ரை அனுப்பவும் தான் தாயங்கப் போவதில்லை என சனாதிபதி சந்திரிகா கூறியுள்ளார்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அண்மையில் யுனைட்டெட் பிரஸ் இன்ர நஷனல் என்ற செய்தி நிறுவனத்திற்கு வழங்கிய செவ்வியிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறும் போது தற்போது தடைப்பட்டுள்ள பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு அது வளர்ச்சிப் போக்கில் செல்லுமானால் விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை தான் (12ஆம் பக்கம் பார்க்க)

## இ.த.அதிகார அடிப்படையில் பேச்சு நடத்துவதே சிறந்தது

### – ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிப்பு

தமிழீழ விடுதலைப்புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி யோசனையின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிப்பதே சிறந்தது என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

எனினும் பேச்சுவார்த்தை மேசைக்கு வந்த பின்னர் மாற்றுக் கருத்துக்கள் குறித்துப் பேசலாம் என அந்தக் கட்சி தெரிவித்துள்ளது

நடைமுறைக்கு மாறாக ஜே.வி.பி.யை திருப்திப்படுத்தும் வகையிலேயே அரசாங்கம் நடந்து கொள்வதாக அந்தக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது. நேற்று நடைபெற்ற ஊடக மாநாட்டில் இந்தக் கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன.

## நாட்டுப்பற்றாளர் இரத்தினத்திற்கு யாழ்.இலும் கிளி.யிலும் மக்கள் அஞ்சலி

### -இன்று இறுதிக்கிரியைகள்

(அலுவலக செய்தியாளர்)

நாட்டுப்பற்றாளர் செல்லையா இரத்தினம் அவர்களின் வித்துடலுக்கு கிளிநொச்சியிலும் யாழ்ப்பாணத்திலும் பெருமளவான மக்கள் நேற்று இறுதி வணக்கத்தைச் செலுத்தினர்.

15.08.2004 ஆம் நாள் சுகயீனம் காரணமாகச் சாவடைந்த இவரின் வித்துடல் கிளிநொச்சிக்கு எடுத்து வரப்பட்டு மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. முன்னதாக இவரின் வித்துடல் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

இங்கு பெரும் திரளான மக்கள் திரண்டு வந்து மலர்களைத் தூவி அஞ்சலி செலுத்தினர். பின்னர் (12ஆம் பக்கம் பார்க்க)



## வரிவிளம்பரம்

**அமுதன் கல்வி நிலையம்**

2005:- DAY CLASS கலை, வர்த்தகப் பிரிவுகள் ஆரம்பம். 18.08.2004 புதன் காலை 11.00 மணி தகவல் நிர்வாகி. (சி.4680)

**சான்றிதழ் வழங்கல்**

NITM.கணினிப் பயிற்சி நிலையத்தில் இதுவரையில் பயிற்சியை முடித்துக் கொண்ட மாணவர்கள் எதிர்வரும் 20/08-04 இற்கு முன்னர் தமது பெயர் விபரங்களை உறுதிப்படுத்திக் கொள்ளவும். Derector NITM:-புதுக்குடியிருப்பு. (4681)

**N.E.C கல்வி நிலையம்**
**A9 வீதி கிளிநொச்சி**

எமது கல்வி நிலையத்தில் இருந்து இம்முறை பல்கலைக் கழகம் அனுமதி பெற்ற மாணவர்களுக்கு கலந்துரையாடல் இருப்பதால் தவறாது 18.08.2004 அன்று பி.ப.4.00 மணிக்கு கல்வி நிலையத்திற்கு சமுகம் தரவும் நிர்வாகம்.N.E.C. (4970)

**N.E.C**
**A9 வீதி கிளிநொச்சி**

A/L DaY Class கலைவர்த்தகப பிரிவுகளுக்கு 20.08.2004 9.00 மணிக்கு வகுப்புக்கள் ஆரம்பம். நிர்வாகம். (4970)

# வருமானம் ஈட்டியவர்களை இழந்து மட்டக்களப்பில் 12,625பேர் தவிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் வருமானம் ஈட்டியவர்களை இழந்து 12,625பேர் தவிப்பதாகக் கணக்கெடுப்பின் மூலம் தெரியவந்துள்ளது.

14 பிரதேச செயலாளர் பிரிவுகளில் இக்குடும்பங்கள் தங்க ளுக்கு வருமானம் ஈட்டித்தந்த கணவன், மனைவி, பிள்ளை, சகோதரம் என்று பலதரப்பட்ட பிரிவினர்களை யுத்தஅனர்த்தங்களினால் இழந்திருக்கின்றன.

வெல்லாவெளிப் பிரதேசத்தில் 1,835 பேரும், மண்முனை வடக்கில் 1,644 பேரும், செங்கலடிப் பிரதேசத்தில்1,475 பேரும், களுவாஞ்சிக்குடிப் பிரதேசத்தில் 1,311 பேரும், கோறளைப்பற்று மேற்குப்பிரதேசத்தில் மிகக்குறைந்த தொகையினராக 236 பேருமுள்ளனர்..


## காணாமல் போய்விட்டார்



வேல்ராஜன் பாலபாரதி -13 பெரியமடு, மன்னார், என்பவர் மூன்று மாதத்திற்கு முன்பு மடுவிலிருந்து கிளிநொச்சி வரும்போது காணாமற் போய்விட்டார். இவரைக் கண்டவர்கள் கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறையில் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:-
ஆ.காண்டீபன்.

(இ)



உ
சிவமயம்

**கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி கோவில்**

## வருடாந்த மகோற்சவ விஞ்ஞாபனம்

**அன்பு சால் அடியார்களே!**

கிளி/ கந்தசுவாமி கோவிலின் வருடாந்த மகோற்சவம் ஆவணித்திங்கள் 4ஆம் நாள் 20.08.2004 வெள்ளிக்கிழமை பகல் 12 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

**மகோற்சவ கால விபரம்**

| | | | | |
|---|---|---|---|---|
| 20.08.2004 | வெள்ளிக்கிழமை | கொடியேற்றம் | பகல் | 12.00 மணி |
| 27.08.2004 | வெள்ளிக்கிழமை | சப்பறம் | இரவு | 8.00 மணி |
| 28.08.2004 | சனிக்கிழமை | தேர் | காலை | 9.00 மணி |
| 29.08.2004 | ஞாயிற்றுக்கிழமை | தீர்த்தம் | காலை | 10.00 மணி |
| 30.08.2004 | திங்கட்கிழமை | பூங்காவனம் | இரவு | 8.00 மணி |

ஆண்மீகச் சொற்பொலிவு, கூட்டுப்பிராத்தனை என்பன மாலை இடம்பெறும் அடியார்கள் அனைவரும் வருகை தந்து முருகப் பெருமான் திருவருள் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

ஆலய அறங்காவலர் சபையினர்
கிளி/அருள்மிகு முருகன் ஆலயம்

(சி-9790)

# உழைக்கும் கரங்களுக்கு உரம் சேர்க்கவும்,
# உழைப்பாளர்களுக்கு நிதிவசதியளிக்கவும்,
# கிளிநொச்சிப் பிரதேசத்தில்

## 19 ஆகஸ்ட் 2004 முதல்

## சீர்க்கோ சீட்டு நிறுவனம்

யாழ்சாலை
கிளிநொச்சி
பதிவு எண்:- வ/15912201

- பல தொகைகளில் சீட்டுக்கள்
- 100% உத்தரவாதம்
- இலகு நடைமுறைகள்
- இரகசியத்தன்மை
- குறுகிய காலத்திட்டங்கள்
- பதிவு செய்யப்பட்ட நிறுவனம்
- நாளாந்தம் செலுத்தும் வசதி
- போனஸ் கொடுப்பனவுகள்

உங்கள் வெற்றிக்கு எம்முடன் இணைந்திடுங்கள்

(சி-10080)

# நஜாப்பில் அமைதியை நிலைநாட்ட உயர்மட்ட பிரதிநிதிகள் மாநாடு

(பாக்தாத்)

**ஈராக்கின் புனித நகரான நஜாப்பில் முத்ததா அல்சதார் ஆதரவாளர்களுக்கும் அமெரிகக ஈராக் கூட்டுப்படையினருக்கும் இடையில் தொடர்ந்து வரும் மோதல்களுக்கு முடிவு காணும் வகையில் உயர்மட்ட பிரதிநிதிகள் குழுவொன்று நஜாப் சென்றுள்ளது.**

நஜாப்பில் அமெரிக்க இராணுவத்தினருக்கும் ஷியா முஸ்லிம் தலைவர் முத்ததா அல்-சதார் ஆதரவாளர்களுக்கும் இடையில் நடைபெற்று வரும் மோதல்களை முடிவிற்குக் கொண்டு வரும் நோக்கிலேயே இந்தப் பிரதிநிதிகள் நஜாப் சென்றுள்ளனர்.

சுமார் 60 மதத் தலைவர்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் அடங்கிய இந்தக் குழுவினர் மோதல்களை முடிவிற்குக் கொண்டு வருவது தொடர்பாக ஈடுபட்டுள்ளனர். இதேவேளை அமைதியை ஏற்படுத்தும் செயற்பாடுகள் குறித்து கலந்துரையாடத் தாம் தயாராக இருப்பதாக முத்ததா அல்-சதாரின் ஆதரவாளர்கள் தெரிவித்துள்ளனர். ஈராக்கில் இடைக்கால நிர்வாக சேவை உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் நோக்கில் பாக்தாத்தில் இடம் பெற்று வரும் தேசிய மாநாட்டில் நஜாப் பிரச்சினை முக்கிய கவனத்தை ஈர்த்துள்ளது.



தென்கொரியாவில் நிலைகொண்டிருக்கும் அமெரிக்க இராணுவ வீரர்கள் பயிற்சியில் ஈடுபடுவதையும், குவைத் நோக்கி புறப்படவுள்ள விமானத்தில் பயணிக்கச் செல்வதையும் காணலாம்.

# ஐக்கிய நாடுகள் சபையில் இரு பெண்களுக்கு முக்கிய பதவி

(நியூயோர்க்)

பாலினப் பிரச்சினைகளையும் மனித உரிமை விவகாரங்களையும் கவனிக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் முக்கிய அமைப்பில் இரு பெண்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். பாலினப் பிரச்சினைகளிலும் பெண்கள் முன்னேற்றம் தொடர்பான திட்டங்களிலும் ஐ.நாவின் பொதுச்செயலர் கொபி அனானின் ஆலோசகராகத் தற்போது ஐ.நாவின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் மனித ஆற்றல் நிர்வாகப் பிரிவின் இயக்குனராக இருக்கும் ராசேல் மயன்ஜா நியமிக்கப்பட்டுள்ளார். அவசர நிவாரண உதவிகள் துணை ஒருங்கிணைப்பாளராக மார்கரெட்டா வால்ஸ்ட்ராம் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் ஆப்கானிஸ்தானில் நிவாரணப் பணிகள், சீரமைப்பு, வளர்ச்சி ஆகிய பணிகளில் ஈடுபட்டிருந்த ஐ.நாவின் பிரிவில் துணைச் சிறப்புப் பிரதிநிதியாகப் பணியாற்றியுள்ளார்.



பாக்தாத் பொலிஸ் நிலையத்தில் நிகழ்ந்த குண்டுத் தாக்குதலில் சேதமடைந்த காரை அவதானிக்கும் ஈராக்கியப் பொலிசார் (குண்டுவெடிப்பில் 2சிறுவர்கள் உட்பட 7 பேர் பலியாகியதுடன் 47 பேர் காயமடைந்தனர்)

# வியட்னாமில் பறவைக் காய்ச்சல்

வியட்னாமில் பறவைக் காய்ச்சல் நோயினால் பாதிக்கப்பட்ட ஒரு பெண் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அந்த நாட்டில் ஹோசி மின்ஹ் நகரிலுள்ள மருத்துவமனையில் டிரான் திபி என்ற பெண் சிகிச்சை பெற்று வருகிறார்.

அவருக்குக் கடுமையான மூச்சுத் திணறல் நோய் காணப்படுகின்றது. பல்வேறு மருத்துவப் பரிசோதனைகள் அவருக்குச் செய்யப்பட்டன. அதில் அவருக்கு பறவைக் காய்ச்சல் நோய் பாதிக்கப்பட்டுள்ளது என்பது உறுதியானது. அவரது உடல்நிலை தேறி வருகின்றது.



கைவிடப்பட்ட நஜாப் நகரவீதியில் கவசவாகனம் அருகே காவலில் நிற்கும் அமெரிக்க இராணுவ வீரர்கள்.

# ஈராக்கில் செய்தியாளர், மொழிபெயர்ப்பாளர் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டனர்

## நசிரியாவின் துணைக் கவர்னர் தகவல்

(பாக்தாத்)

தெற்கே உள்ள நசிரியா நகரில் வெளிநாட்டு நிருபர் ஒருவர் வெள்ளிக்கிழமை கடத்தப்பட்டார். நசிரியாவின் துணைக்கவர்னர் அந்தன் அல்-ஷோரோபி இத்தகவலைத திங்கட்கிழமை தெரிவித்தார். கடத்தப்பட்ட நிருபர் அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் ஆகிய இரு நாடுகளின் குடியுரிமையைப் பெற்றவர் அவருக்குத் துணையாக பணியாற்றிய ஈராக்கிய மொழிபெயர்ப்பாளரும் கடத்திச் செல்லப்பட்டார். இத்தகவல் மொழி பெயர்ப்பாளரின் குடும்பத்திற்குத் தெரிவிக்கப்பட்டதாக துணைக்கவர்னர் திங்கட்கிழமை தெரிவித்தார். நசிரியா அருகே அருங்காட்சியகத்திற்கு பரா்மரிப்புத் திட்டத்திற்கு நிதியுதவி அழிக்கும் நிறுவனத்திற்காக அவர் பணியாற்றி வந்தார். அல்-ஜசிரா தொலைக் காட்சியும் இந்தக் கடத்தலைச் செய்தியாக அறிவித்தது. ஆனால், முழு விபரங்களைத் தெரிவிக்கவில்லை. கடத்தப்பட்ட நிருபரின் இதர விபரங்கள் இது வரை தெரியவில்லை. நசிரியாவுக்கு அருகே முகாமிட்டுள்ள இத்தாலிய இராணுவத்தினர் இந்தக் கடத்தல் குறித்து தகவல் எதுவும் தெரிவிக்க மறுத்து விட்டனர். பாக்தாத்தில் உள்ள அமெரிக்கத் தூதரகம் இந்தச் செய்தியை உறுதிப்படுத்தவில்லை. இதுவரை தங்களுக்கு தகவல் எதுவும் வரவில்லை என்று மட்டுமே தெரிவித்தது. ஆனால் விசாரித்து வருகிறது.

# பொதுத் தேர்தலில் வெற்றி பெற்றால் பக்கச் சார்பற்ற அரசொன்றை அமைப்பேன்

**-ஆப்கானிஸ்தான் சனாதிபதி**

ஆப்கானிஸ்தானின் சனாதிபதித் தேர்தல் ஒக்ரோபர் மாதம் 9ஆம் திகதி நடைபெறும் என அந்நாட்டுச் சனாதிபதி ஜம்மீர் கர்ஷாய் தெரிவித்துள்ளார். இத் தேர்தல் தொடர்பாக அவர் கருத்துத் தெரிவிக்கையில்:

நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலின் முதலாவது சுற்றில் தாம் வெற்றியடைந்தால் திறமையான பக்கச்சார்பற்ற அரசாங்கமொன்றை ஆப்கானிஸ்தான் மக்களுக்கு வழங்கப்போவதாகத் தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தான் மக்கள் சட்டத்தை மீறி நடக்கவில்லையென்றும் அரசாங்கமே சட்டத்தை உதாசீனம் செய்து வந்துள்ளது என்றும் குறிப்பிட்டார். மேலும் கூறுகையில் தனது அரசாங்கத்தில் தனிநபர் சம்பந்தமான நிகழ்ச்சி நிரல் எதுவும் இருக்கமாட்டாது என்று குறிப்பிட்ட அவர். சகல திட்டங்களின் நலனையே இலக்காகக் கொண்டிருக்கும் என்றும் தெரிவித்தார்.


ஆப்கானிஸ்தானின் ஆதிவாசிகள் மற்றும் பிரஜைகள் பங்கு பற்றிய பொது மாநாட்டில் ஆப்கானிஸ்தானின் சனாதிபதியாக 2002ஆம் ஆண்டு ஜம்மீர் கர்ஷாய் தெரிவு செய்யப்பட்டிருந்தார். ஆப்கானிஸ்தானின் முதலாவது சனாதிபதித் தேர்தலில் ஜம்மீர் கர்ஷாய் வெற்றி பெறுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும் எதிர்த்துப் போட்டியிடுகின்ற பாதுகாப்பு அமைச்சர் மொகமட்காசிம் அவருக்குத் தீவிர சவாலாக உள்ளாரென்று அறிவிக்கப்படுகின்றது.

ஒரு கோடிக்கும் அதிகமான ஆப்கானிஸ்தான் மக்கள் வாக்களிப்பதற்குத் தங்களைத் தயார்ப்படுத்திக் கொள்ளும் விதத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பெயர்களைப் பதிவு செய்து பெருவிரல் அடையாளத்தையும் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 15 பேர் காயம்

(பெல்காம்)

கர்நாடக மாநிலத்தின் பெல்காம் நகரில் மதக்கலவரம் காரணமாக மோதல்களும், தீயிடல் சம்பவங்களும், சூறையாடல்களும் நடந்துள்ளன. பெற்றோல் குண்டுகளை இருதரப்பினரும் வீசிக்கொண்டனர். 15 பேர் காயம் அடைந்தனர். நகரில் பொலிஸ் சட்டப்படி 144 ஆவது பிரிவின் கீழ் தடைஉத்தரவு அமுலில் இருக்கிறது.



இஸ்ரேலிய சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ள தமது கணவர்மார்களின் படங்களுடன் ஆர்ப்பாட்டம் நடத்தும் பலஸ்தீனப் பெண்கள் அங்குள்ள ஐரோப்பிய ஒன்றிய அலுவலகத்தினுள் செல்கின்றனர்.

# பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தற்போது மிக மோசமாக கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன

–சங்கம நிகழ்வில் வவுனியா அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர்

(செட்டிகுளம்)

**"போர்க்காலத்தை விடவும் இன்றுதான் பெண்களுக்கு எதிரான வன் முறைகள் மிகவும் மோசமாக கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றன." இவ்வாறு வவுனியா மாவட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் அலை தெரிவித்தார்.**

வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பெண்கள் சங்கம நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில், போர்க்காலத்தில் பெண்களுக்கு எதிரான பலநடவடிக்கைகள் இருந்தனதான். எனினும் அப்போது இருந்ததை விடவும் மோசமாக தற்போது நடைபெறும் செயல்கள் மிகவும் கேவலமாகவுள்ளன. பாலியல் ரீதியான பிரச்சினைகள், வருமானம் தொடர்பான பிரச்சினைகள் என்பவற்றால் அவ்களை எதிர்நோக்கும் பிரச்சினைகளைப் பார்த்தால் இந்த செயல்களுக்கு சில சக்திகள் பின்நின்று செயற்படுவது தெரிகின்றது. எனவே தான் இவ்வாறான சங்கம நிகழ்வுகள் மூலம் இன்று பெண்கள் எவ்வாறான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர் என்பது தொடர்பாக ஆராயவும், இதற்கு என்ன தீர்வு என்று ஆராயவும் இந்த நிகழ்வு நடைபெற்றது. பெண்கள் வெளியில் சொல்லமுடியாத பல விடயங்களை ஏனையோரிடம் பகிர்ந்து கொள்வதன் மூலம் தீர்வு காணமுடியும். அதற்கு இவ்வாறான நிகழ்வுகள் மிகவும் முக்கியமானதாக அமைகின்றது என்று அவர் மேலும் தெரிவித்தார். முன்னதாக காலை ஒன்பது மணிக்கு மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி தேசியக்கொடியை ஏற்றிவைக்க, நிகழ்வின் பொதுச் சுடரினை வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தி.ஞானவேல் ஏற்றிவைத்தார். வவுனியா மாவட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் அலை தலைமையில் நிகழ்வுகள் மாலை வரை நடைபெற்றன.

இந்த நிகழ்வில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர்கள் செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், கனகரட்ணம், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன், விடுதலைப்புலிகளின் மருத்துவர் எழுமதி கரிகாலன், முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் உட்பட பல முக்கியஸ்தர்களும் 600இற்கும் மேற்பட்ட பெண்களும் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் பெண்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் பிரச்சினைகளுக்குத் தீர்வு தொடர்பாக பலமுக்கியஸ்தர்கள் விளக்கவுரையினையும் வழங்கினார்கள். நிகழ்வில் செல்வம் அடைக்கலநாதன் உரையாற்றும் போது இன்று பெண்கள் ஆண்களுக்கு அடிமை என்று கூற முடியாது. காரணம் இன்று இந்த விடுதலைப்போராட்டம் இவ்வளவு வளர்ந்துள்ளதற்கு பெண்கள் மிக முக்கியமானவர்கள். தேசியத் தலைவரின் எண்ணத்தில் இருந்து பெண்களுக்கு சமவுரிமை வழங்கப்பட்டு இன்று பெண்கள் மிகவும் உயர்ந்த ஸ்தானத்தில் வைக்கப் பட்டுள்ளனர். எனினும் எமது சமுதாயத்தில் இன்றும் சில அடக்கு முறைகள் இருக்கத்தான் செய்கின்றன என்று குறிப்பிட்டார். (21)

## வேவுவிமானம் நோட்டம்

(புதுக்குடியிருப்பு)

முல்லைக்கடற்பரப்பையண்டிய கரையோரப்பகுதிகளில் சிறிலங்கா விமானப்படையின் வேவு விமானம் நேற்று முன்தினம் நோட்டமிட்டுச் சென்றது. இவ்விமானம் முல்லை கரையோரப் பகுதி கிராமங்கள் மேலாக வட்டமிட்டு நோட்டமிட்டுச் சென்றது. (08,20)

# மாவீரர் படிப்பகம் திறப்பு



(முள்ளியவளை)

முள்ளியவளைப் பிரதேச முறிப்பு கிராமத்தில் மாவீரர் படிப்பகம் திறந்து வைக்கப் பட்டுள்ளது. மேற்படி கிராம அரசியல் துறைபொறுப் பாளர் இ.செந்தூரனின் ஒழுங்குபடுத்தலில் அப் பகுதி ஊரக தேசிய எழுச்சிப் பேரவையினரின் அனுசரணையுடன் அப்பகுதி மக்களால் புதிதாக அமைக்கப்பட்ட மாவீரர் படிபகம் திறப்பு கடந்த புதனன்று மாலை 4.00 மணிக்கு குமாரபுரம் முறிப்பு கிராம அலுவலர் மா.க. சௌந்தராஜா தலைமையில் நடைபெற்றது.

மங்கல விளக்கினை கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக் கொடியினை முள்ளியவளைப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.நாகமைந்தன் ஏற்றிவைத்ததையடுத்து மாவீரர் படிப்பக பெயர்ப்பலகையினை அளம்பில் பிரதேச பங்குத்தந்தை வண.பிதா யூட் அமலதாஸ் அடிகளார் திரைநீக்கம் செய்து வைக்க, படிப்பகக் கட்டடத்தொகுதியினை தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறையின் தூயவன் அரச அறிவியல் கல்லூரி பொறுப்பாளர் பார்த்தீபன் சம்பிரதாயபூர்வமாக நாடாவினை வெட்டித் திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து நிகழ்வுக்கான வரவேற்புரையினை குமாரபுரம் முறிப்பு மாதர் சங்கத்தலைவி திருமதி சுபாஜினி இராகுலன் நிகழ்த்தியதையடுத்து நிகழவின் தலைவரின் தலைமையுரை இடம் பெற்றது. சிறப்பு கருத்துரையினை முல்லைத்தீவு மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ. முகுந்தன், பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் ஆகியோர் நிகழ்த்தினர்

மேற்படி மாவீரர் படிப்பகத்திற்காக அப்பகுதி மக்களாலும் முல்லை. மாவட்ட தொழிற்சங்க பொறுப்பாளரினாலும் அன்பளிப்புப் பொருட்கள் வழங்கப்பட்டதையடுத்து அப்பகுதி ஊரக தேசிய எழுச்சிப் பேரவைத் தலைவர் சீதாராமனின் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவானது. (ஆ)

# புற்றுநோய் சிகிச்சைப்பிரிவை இயங்கவைக்க படையினர் சம்மதம்

-மீண்டும் உறுதிமொழி கிடைத்தது

(வடமராட்சி)

அதியுயர் பாதுகாப்பு வலயப்பகுதியினுள் அமைந்துள்ள தெல்லிப்பளை புற்று நோய் சிகிச்சைப்பிரிவு மீண்டும் சுமுகமாக இயங்க நடவடிக்கை எடுப்பதாக யாழ்.மாவட்ட இராணுவத் தலைமை மீண்டும் உறுதிமொழி வழங்கியுள்ளது.

முன்னரும் குறித்த புற்று நோய் சிகிச்சைப்பிரிவை சுமுகமாக இயங்க ஒத்துழைப்பு வழங்குவதாக படைத்தரப்பு உறுதிமொழி வழங்கியிருந்தபோதிலும், பின்னர் நோயாளிகள் மற்றும் வைத்தியசாலைப் பணியாளர்கள் மீது காட்டப்பட்ட கெடுபிடிகளால் இம்முயற்சிகள் தோல்வியிலேயே முடிவுற்றிருந்தது. குறிப்பாக வைத்தியசாலைப் பணியாளர்கள் மீதான கெடுபிடியால் ஒரு சில பணியாளர்களே படையினரது பாசுடன் கடமைக்கு இதுவரை சென்று வந்தனர்.

இந்நிலையில் தற்போது அங்கு மீள ஆரம்பிக்கப்பட்ட கட்டட நிர்மாணப்பணிகளை அடுத்து ஒரு தொகுதி கட்டடங்கள் எதிர்வரும் செப்ரெம்பர் 15 ஆம் திகதி வைத்தியசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப் படவுள்ளன. வெளிநோயாளர் சிகிச்சைப்பிரிவு, நோயாளர் விடுதி மற்றும் வைத்தியர் விடுதி என்பவையே முதற்கட்டமாக கையளிக்கப்படவுள்ளன.

இதேவேளை எஞ்சிய கட்டட நிர்மாணப்பணிகளும் விரைவில் முடிவுறுத்தப்பட்டு கையளிக்கப்படுமென வைத்தியசாலை அபிவிருத்திச் சங்க வட்டாரங்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளன.

இதனிடையே வைத்தியசாலையினை 15 ஆம் திகதி முதல் முழுமையாக இயக்கவும், நோயாளர்கள் மற்றும் பணியாளர்கள் தெல்லிப்பளை இராணுவச் சோதனைச் சாவடியூடாக சுமுகமாக சென்று திரும்பவும் உரிய செயற்பாடுகளை செய்து வழங்குவதாக யாழ். மாவட்ட சிறிலங்காப் படைகளின் கட்டளைத் தளபதி தமக்கு உறுதியளித்திருப்பதாக, வைத்தியசாலையினை மீள இயக்குமுகமாக முயற்சிகளை மேற்கொண்டுள்ள அபிவிருத்திச் சபையின் பிரதிநிதி வைத்திய கலாநிதி இ.தெய்வேந்திரம் தெரிவித்தார். (27)

# பாதுகாப்பு வலயத்தினுள் கட்டாக்காலி நாய்கள் தஞ்சம்!

ஒழிப்பு நடவடிக்கை பாதிப்பு

தென்மராட்சியிலுள்ள இராணுவப் பாதுகாப்பு வலயங்களுள் தஞ்சமடைந்து வாழ்ந்து வரும் கட்டாக்காலி நாய்களைஒழிக்க முடியாத நிலை காணப்படுவதாக சம்பந்தப்பட்ட துறைசார் அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளன.

விசர்நாய்க் கடித் தாக்கங்களைக் கட்டுப்படுத்துவதற்காக வேண்டி கட்டாக்காலி நாய்களை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ள போதும், அதிகளவான கட்டாக்காலி நாய்கள் இராணுவ பாதுகாப்பு வலயத்துள்ளேயே தஞ்சம் புகுந்து வாழ்ந்து வருகின்றன. இதனால் கட்டாக்காலி நாய் ஒழிப்பு நடவடிக்கைகளைத் திறம்படச் செய்து முடிக்கமுடியாத சூழ்நிலை காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (33)

# யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு புதிய காணியொன்று கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை, தமிழீழக்கல்வி மேம்பாட்டுப் பேரவை மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரது கூட்டு முயற்சிகள் காரணமாக, இதுவரைகாலமும் சொந்தக் கட்டடம் இன்றி திருநெல்வேலியிலுள்ள தனியார் வீடொன்றில் தற்காலிகமாக இயங்கிவந்த யாழ்ப்பாண உயர்தொழில் நுட்ப நிறுவனத்திற்கு நிரந்தரமான கட்டடத்தை அமைப்பதற்குரிய காணி ஒன்று கிடைக்கப்பெற்றுள்ளது.

அடிப்படைவசதிகள் இல்லாது தனியார் காணி ஒன்றில் மேற்படி கல்வி நிறுவனம் இயங்கிவருவதால் மாணவர்கள் எதிர்கொண்ட பிரச்சினைகளுக்கும், பின்னடைவுகளுக்கும் தீர்வுகாணும் நோக்கில் யாழ்.குருநகர்ப் பகுதியிலுள்ள 40 பரப்புடைய அரச காணி ஒன்றை யாழ்.உயர்தொழில்நுட்ப நிறுவனத்திற்காகப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான உத்தியோகபூர்வ ஆவணங்களை யாழ்.அரச அதிபர் செ. பத்மநாதன் நேற்றுமுன்தினம் உயர் தொழில்நுட்ப நிறுவனப் பணிப்பாளர் இராஜரட்ணத்திடம் கையளித்தார்.

இக்காணியினுள் யாழ்.உயர் தொழில்நுட்பநிறுவனத்திற்கான புதிய கட்டடத்தை அமைப்பதற்கு தேசிய உயர் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் சர்வதேச தொண்டர் நிறுவனங்களிடம் உதவிகள் கோரப பட்டுள்ளன. (33)

# கல்வியியற் கல்லூரி மாணவனை மீண்டும் இணைக்கப் பணிப்பு

(வடமராட்சி)

யாழ். தேசியக் கல்வியியற் கல்லூரி நிர்வாகத்தினரால் இடைநிறுத்தப்பட்ட ஆசிரிய பயிலுநரான ர.ரவிராஜ் என்ற மாணவனை மீண்டும் கல்லூரியில் இணைத்துக்கொள்ளுமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பணித்துள்ளது.

அத்துடன் எதிர்வரும் 26 ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ள கல்வியியற் கல்லூரி பரீட்சைகளில் தோற்ற அனுமதிக்குமாறும் அது மேலும் பணித்துள்ளது.

யாழ்.தேசியக் கல்வியியற் கல்லூரி நிர்வாகத்தினரால் இடைநிறுத்தப்பட்டிருந்த இம்மாணவன் தனக்கு நீதி கோரி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடொன்றினைச் செய்திருந்தார்.

இம்முறைப்பாட்டினடிப்படையில் கொழும்பு தலைமையகத்திற்கு அழைக்கப்பட்டிருந்த கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி மற்றும் ஆ[illegible]யாளருடன் இடம்பெற்ற பேச்[illegible]களையடுத்தே இப்பணிப்புரை [illegible]டுக்கப்பட்டுள்ளது. (27)

—மின்சாரக் கம்பியில் சிக்கி குரங்கு உயிரிழப்பு—

# குழப்பமடைந்த குரங்குகள் வீதியால் சென்றோர் மீது தாக்குதல்

(வடமராட்சி)

மின்சாரக்கம்பியில் சிக்குண்டு குரங்கொன்று உயிரிழந்ததையடுத்து சக குரங்குகள் வெறிகொண்டு தாக்கியதில் பொதுமகன் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் காலை யாழ்.கண்டி வீதியின் நுணாவில் பகுதியில் இடம் பெற்றது. பிரதான வீதியூடாகச் செல்லும் மின்சார இணைப்புக் கம்பமொன்றில் ஏறிய குரஙகொன்றே மின்தாக்கி உயிரிழந்துள்ளது.

இதனால் குழப்பமுற்ற ஏனைய குரங்குகள் வீதியால் பயணித்த பொதுமக்களைத் தாக்கியுள்ளன. இதில் குரங்கினால் தாக்கப்பட்ட நபரொருவர் சாவகச்சேரி அரசினா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வெளியேறியுள்ளார். (27)

## 14 குளங்கள் புனரமைப்பு

நொராட் அமைப்பினது நிதியுதவியுடன் யாழ் குடாநாட்டில் உள்ள 14 குளங்கள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன. நொராட் அமைப்பினரது நீர் முகாமைத்துவம் மற்றும் சூழல் பாதுகாப்புச் செயற்றிட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள இப்புனரமைப்புத் திட்டத்திற்காக முன்னுரிமை அடிப்படையில் குளங்கள் தெரிவு செய்யப்படவுள்ளன. இதற்கான ஆலோசனைக் கூட்டம் ஒன்று நேற்று முன்தினம் யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில யாழ.செயலகத்தில் இடம் பெற்றது. (33)

# மீன்பிடிப் படகையும் விடுவிக்க உத்தரவு

குருநகர் சீநோர் இறங்குதுறையினூடாக வெடிபொருட்களைக் கடத்த முற்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள மீன்பிடிப்படகொன்றை விடுவிக்க யாழ். மாவட்ட மேலதிக நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான பிணை முறியொன்றினைச் சமர்ப்பித்து படகைப் பெற்றுக கொள்ள அப்படகின் உரிமையாளரை மேலதிக நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்த சேகரன் அனுமதித்திருந்தார்.

இதேவேளை குறித்த படகில் வெடி பொருட்களைக் கடத்த முற்பட்டதாகக் குற்றஞ்சாட்டி கைது செய்யப்பட்ட மீனவர்கள் நால்வரும் ஏற்கனவே பிணையில் விடுவிக்கப பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (27)

## 09

* பட்டதாரிகள் நியமனத்தில் யாழ். உயர் தேசிய கணக்கியல், வர்த்தக, முகாமைத் துவ டிப்ளோமா, பட்டதாரிகள் புறக்கணிக் கப்பட்டதைக் கண்டித்து யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் அரச செயல கம் முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.



பட்டதாரிகள் மறியல்

*அரச சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜயந்ததனபால யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து பல்வேறு அமைப்பின ருடன் கலந்துரையாடினார்.

* மட்டக்களப்பு ஏறாவூரைச் சேர்ந்த முஸ் லிம் வயோதிபப் பெண் ஒருவர் இஸ்லா மியக் குழுவினரால் சுட்டுக்கொலை.


* அதியுயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் சிறிலங்கா இராணுவத்தினரால் முடக்கிவைக்கப்பட்டுள்ள தமது வாழ் விடங்களை விடுமாறு கோரி தென்மராட்சி உசன் பிரதேச மக்கள் பிரதேசசெயலகம் முன்மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.


மக்கள் போராட்டம்

* சனாதிபதித் தேர்தலில் மீண்டும் சந்திரிகா போட்டியிட முடியாதென அரசியல் யாப்பு விவகார அமைச்சர் ஜி.ஏ.முனசேகர தெரிவிப்பு.

## 10

*தென்னிந்தியாவிலிருந்து அபாயகர மானதும், கடினமானதுமான கடற்பய ணத்தை மேற்கொண்டு தாயகம் திரும்பும் அகதிகளின் பாதுகாப்பான பயணத்திற்கு உதவி புரியுமாறு ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர்ஸ்தானி கராலய இலங்கைக்கான பிரதிநிதியிடம் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கேட்டுக் கொண்டார்.


கடல் பயணத்துக்கு உதவ வலியுறுத்து

*ஜே.வி.பியுடன் நடைபெறவிருந்த சந்திப்பை சனாதிபதி சந்திரிகா திடீரென ரத்துச் செய்தார்.

*" அந்திராக்ஸ்" நச்சுத்தூள் சிறிய கடிதத்தில் அனுப்பப்பட்டதைத் தொடர்ந்து அமெரிக்கத் தூதரகம் மூடப்பட்டது.

*யாழ்ப்பாணத்தில் மிதிவெடிகள் அகற்றப்படுகின்ற பிரதேசங்களை அமெரிக்க அதிகாரிகள் பார்வையிட்டனர்.

## 11..

* இடைத் தரகர்களைத் தவிர்த்து நேரடியாகத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைச் சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தவிரும்புகிறேன் என சனாதிபதி சந்திரிகா தெரிவித்தார்.

* அமெரிக்க இராஜாங்கதிணைக்களத்தின் கண்ணிவெடி அகற்றும் நிபுணர் குழுவினர் வவுனியா விஜயம்.

*

தமிழீழ விடுதலைப்புலிகளின் சமாதான செயலகத்துக்கு தீர்வையற்ற நான்கு வாகனங்களை அரசு வழங்கியமை தொடர்பாக விமல் வீரவன்ச அதிருப்தியை வெளியிட்டார்.

* சனாதிபதி சமாதான முன்னெடுப்புகள் தொடர்பான தமது நிலையை நோர்வேத் தரப்பிடம் தெளிவாக விளக்கியுள்ளாரென அரசின் சமாதான செயலர் ஜயந்ததனபால தெரிவித்தார்.

* அம்பாறை மாவட்டத்தில் புலிகள்-அதிரடிப்படையினர் சந்திப்பு.

## 12

* தமிழீழ விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைத் திட்டத்துக்கு மாற்றாக அரசாங்கம் இடைக்கால நிர்வாக யோசனை யொன்றைத் தயாரித்து வருகின்றதென அமைச்சர் மங்கள சமரவீர தெரிவிப்பு.

* மட்டக்களப்பில் தமிழீழ விடுதலைப்புலி களுக்கும், தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் சந்திப்பு இடம் பெற்றது.




*

திருகோணமலை மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தின் முன்பாக ஈ.பி.டி.யினர் பிரேதப். பெட்டியை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

* திருமலை துறைமுகப் பகுதியில் புலிகளினால் இராணுவப் பலம் அதிகரிக் கப்படுவது தொடர்பாக அரசாங்கத்திடம் இருந்து தமக்கு முறைப்பாடு கிடைத்துள்ள தென போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் துணைத்தலைவர் ஹொக்லண்ட் தெரிவிப்பு.

* புலிகளின் சமாதானச் செயலகத்துக்கு தீர்வையின்றி வாகனங்களை வழங்கியமை தொடர்பாக ஜே.வி.பியிடம் தெளிவற்ற நிலை காணப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிச் செயலாளர் குற்றஞ் சாட்டினார்.

* ஐ.தே.கட்சி அடுத்த வாரம் நடைபெறவுள்ள பாராளுமன்ற அமர்வுகளை பகிஷ்கரிக்கப்போவதாகத் தெரிவிப்பு.

* பல்கலைக்கழக மாணவர் தெரிவின் போது பின் தங்கிய மாவட்டமாக மட்டக்களப்பு மாவட்டத்தை அறிவிக்குமாறு கோரி மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

* இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபம் சென்னுக்கு சனாதிபதி சந்திரிகாவின் மாளிகையில் பிரியாவிடை வழங்கும் வைபவம் இடம் பெற்றது.

## 13

* புலிகளையும்-ஜே.வி.பியையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான முயற்சியை மேற்கொள்ளத்தயாராக இருப்பதாகத் தெரிவித்து மலையக மக்கள் முன்னணித்தலைவர் சந்திரசேகரன் பேச் சுக்கு நேரம் ஒதுக்கித்தரு மாறு ஜே.வி. பியின் பிரச்சாரச் செயலாளர் விமல் வீரவன்சவுக்கு கடிதம் அனுப்பினார்.

* புளியங்குளத்தில் கடந்த மாதம் 19 ஆம் திகதி கைது செய்யப்பட்டு தமிழீழ காவல்துறையினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த இராணுவத்திலிருந்து தப்பியோடிய இராணுவவீரர் அவரது தாயாரிடம் ஒப்படைப்பு.


சிப்பாய் ஒப்படைப்பு

* அத்தியாவசியப் பொருட்களுக்கான மானியங்களை நீக்கவுள்ளமையால் பொருட்களின் விலை அதிகரிக்கப்படுமென நிதியமைச்சர் சரத்அமுனுகம தெரிவிப்பு

* மனிதவுரிமைகள் கண்காணிப்புக் குழுவின் சிறுவர்கள் உரிமைக்கான பணிப்பாளர் போ.பெக்கர் வட-கிழக்கு மாகாணப் பணிப்பாளர் அருட்.திரு.கரு ணாரட்ணம் அடிகளாரைச் சந்தித்து வட-கிழக்கு மக்களால் முகம் கொடுக்கப்படும் மனிதவுரிமைகள் தொடர்பான பல்வேறு பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடினார்.

* தங்காலையில் மரண வீடொன்றினுள் நுழைந்த ஆயுததாரிகள் நடத்திய துப் பாக்கிச் சூட்டில் நான்கு பேர் பலி.

* வடமராட்சி மந்திகை மடத்தடிச் சந்தியில் இடம்பெற்ற வீதிவிபத்தில் ஒருவர் பலி.


## 14

* அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச் செல்வனுக்கும், ஜப்பானியத் தூதுவர் அக்கியோசூடாவிற்குமிடையே சந்திப்பு இடம்பெற்றது.


தூதுவருடன் சந்திப்பு

* வன்னியிலுள்ள நிர்வாகத்திறமை எனக்கு மிகவும் பிடித்துள்ளதென ஜப்பானியத் தூதுவர் அக்கியோசூடா தெரிவித்தார்.

* அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் நோர்வேயின் பிரதித் தூதுவர் ஒட்வர்லேகிறிட்டை சந்தித்துப் பேசினார்.


நோர்வே பிரதித் தூதுவருடன்

* பிரதமர் மகிந்தராஜபக்ஷ எதென்சில் நோர்வேப் பிரதமர் கெல்மனேபொன் டெவிக்கைச் சந்தித்துக் கலந்துரை யாடினார்.

* பலப்பிட்டிய நீதிமன்றத்திற்கு அருகில் மூன்று பேர் 'சுட்டுக்கொலை.

## 15

* வட-கிழக்கைப் பிரித்து நிர்வாகம் ஒன்று செயற்படுமானால் கொழும்பு, வெள்ளவத்தை, பம்பலப்பிட்டிய போன்ற இடங்களில் தமிழர்களின் நிலை என்ன என ஜே.வி.பி கேள்வி யெழுப்பியது.

* அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்களை கத் தோலிக்க ஆயர் குழுவினர் சந்தித்து சமாதான முயற்சியை முன்னெடுப்பது குறித்து ஆராய்ந்தனர்.


ஆயர் குழுவுடன் ஆராய்வு

* திருமலை மாவட்ட உவர்மலைப் பகுதிக்கு அரசியல் பணிக்காகச் சென்ற 7 போராளிகள் படையினரால் தடுத்து வைக்கப்பட்டு பின்னர் விடுவிப்பு.

* வட-கிழக்கு அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு நடவடிகைகளுக்கு இந்திய அரசாங்கம் உதவத் தயாராகவுள்ளதாக இலங்கைக்கான இந்தியத் தூதுவர் தெரிவிப்பு.

# உந்துருளி–துவிச்சக்கரவண்டி விபத்தில் ஒருவர் படுகாயம்

(முள்ளியவளை)

முள்ளியவளை தண்ணீரூற்று பிரதான வீதியில் எதிரெதிரே வந்த உந்துருளியும் துவிச்சக்கர வண்டியும் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்தார். காலை 7.30 மணியளவில் முள்ளியவளை ஆலடிச்சந்தியில் இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

ஒட்டுசுட்டான் பகுதியில் இருந்து வேகமாக வந்துகொண்டிருந்த உந்து ருளி முள்ளியவளை சந்தைப்பக்கமாக வந்து சந்தியில் திரும்ப முனைந்தபோது விபத்து ஏற்பட்டு துவிச்சக்கர வண்டியில் சென்ற முள்ளியவளை 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த தியாகராசா கோவேந்தன் (வயது 22) என்பவர் படுகாயத்திற்குள்ளாகி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

மேற்படி வீதியில் அடிக்கடி சிறுசிறு விபத்துக்கள் இடம்பெற்று வரு கின்றன. வேகக்கட்டுப்பாடு கடைப்பிடிக்கப் படாமையினாலேயே இவ் விபத்துக்கள் ஏற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தகது. (ஆ)

# இரு ஆரம்ப சுகாதார நிலையங்கள் திறப்பு

(அலுவலக செய்தியாளர்)

யுனிசெவ் நிதியுதவியுடன் கிளி நொச்சி கனகாம்பிகைக்குளம், உதய நகர் மேற்கு கிராமங்களில் புதிதா கக் கட்டப்பெற்ற ஆரம்ப சுகாதார நிலையங்கள் வைபவரீதியாக திறந்து வைக்கப்பெற்றது.

கிளி.மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி கே.சுஜநதன் தலைமையில் நடை பெற்ற மேற்படி வைபவத்தில் கனகாம்பிகைக்குளம் ஆரம்ப சுகா தார நிலையத்தினை கிளி.கரைச் சிப் பிரதேசச் செயலர் பொன். நித்தியானந்தம் நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணிக்கும் உதயநகர் மேற்கு கிராமத்தில் அமைக்கப் பெற்ற ஆரம்ப சுகாதார நிலையத்தினை கிளி. மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் பிற்பகல் 5.15 மணிக்கும் சம்பிரதாய பூர்வமாக நாடாவினை வெட் டித திறந்து வைத்தனர்.

கிளி.மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், உலக உணவுத்திட்டபிரதிநிதி திருமதி.சுகுணா,பொது சுகாதார பரிசோதகர்கள், குடும்பநல உத்தியோகத்தர், த.பு.கழக பிரதிநிதிகள், மாவட்ட அரசியல துறைப் பொறுப்பாளர்கள், கிராம அபிவிருத் திச் சங்கத் தலைவர், செயலர்கள், கிளி.மாவட்ட இலங்கை செஞ்சிலுவைச்சங்கதலைவர், செயலாளர்கள், பொது மக்கள் கலந்து கொண்டனர். (சோ.கு)



**மகளிர் படையணி 19ஆவது ஆண்டில் கால்பதிப் பதையிட்டு மூத்தஉறுப்பினர் ரதி மற்றும் தளபதிகள் கேணல் விதுசா, கேணல் துர்க்காஆகியோருடனான நேர்காணல்**

# விடுதலைக்கான போராட்டத்தில் சம பங்காளிகளான மகளிர் படையணி

*கேள்வி:-மகளிர் படையணியினர் உருவாகிய காலத்தை உங்களால் நினைவுகூர முடியுமா? (மூத்த உறுப்பினர் ரதி)*

தமிழீழ போராட்ட வரலாற்றில் முதன்முதலில் பெண்களையும் போராட்டத்தில் இணைக்க வேண்டும் என்ற தீர்க்க தரிசனம் மிக்க முக்கியத்துவம் எமது தேசியத் தலைவரால் உணரப்பட்டு, அந்த வகையில் 1985 ஆம்ஆண்டு முதன் முதலில் பெண்கள் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் தேசியத் தலைவரால் உள்வாங்கப்பட்டனர். அந்த வகையில் மகளிர் படையண்ிக்கான முதலாவது பயிற்சி இந்தியாவில் நடைபெற்றது.

1985 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 18 ஆம்திகதி உத்தியோகபூர்வமாக கொடியேற்றி வைத்து அவர்களுக்கான பயிற்சி ஆரம்பிக்கப்பட்டது. இதற்காக நூற்றுக் கணக்கான பெண்கள் இந்தியாவை நோக்கிச் சென்றனர். அதில் பலருக்கு கடற்பயணத்தில் முன்னனுபவம் இல்லை. அந்தக் கடற்பயணத்தில் ஆண் போராளிகள் துணிவை எமக்கு ஊட்டினர். எமக்கு விடுக்கப்பட்ட சவாலாகவும் அந்தப் பயணத்தை நாம் ஏற்க வேண்டியிருந்தது. இதில் முதலாவதாகப் போன அணியிடம் எமது தேசியத் தலைவரே நேரடியாக விபரங்களைக் கேட்டறிந்தார்.

"உங்களால் பயிற்சி எடுக்க முடியுமா? உங்களால்முடியாது போனால் இதை நாங்கள் நிர்ப்பந்திக்கவில்லை, கட்டாயப்படுத்தவில்லை. முடியுமானால் பயிற்சி எடுக்கலாம். அதேவேளை பயிற்சிகள் கடுமையாகவும் இருக்கும். உணவும், நீங்கள் எதிர்பார்ப்பது போல் இருக்காது. நீங்கள் இவற்றை யோசித்து நாளைக்கு எனக்குப் பதிலைச் சொல்லுங்கள். பயிற்சி எடுக்கப் போறேனா? அல்லது வீட்டை போகப் போறேனா? வீட்டேபோகப்போறன் என்று சொல்பவர்களை நீங்கள் எப்படிப் பாதுகாப்பாக வந்தீர்களோ அதேபோல் பாதுகாப்பாக உங்களது வீடுகளுக்கு அனுப்பி வைப்பேன்'' என்று தலைவர் எம்மிடம் கூறினார்.

கடலில் வரும்போது கடற்படை எம்மை துரத்தித் துரத்தி அடித்தவன். இங்கு இப்படிக் கஷ்ரமாகக் கிடக்கிறது பயிற்சியை விட்டுவிட்டு வீட்டுக்குப்போகலாமா என்று கூட அதில் பலர் சிந்தித்திருந்தோம். ஆனால் தேசியத்தலைவர் ஒவ்வொருவருடனும் கதைத்த பக்குவம் எம்முடன் நடந்துகொண்டமுறை இந்தத் தலைவருக்குக் கீழே நாங்கள் இருக்கவேண்டும் என்ற உணர்வை ஏற்படுத்தியது.

பயிற்சிக்குச் சென்ற எம்முடன் தலைவர் முதலில் எமது கஷ்ரத்தைப் பற்றியே பேசிக்கொண்டார். பின்னர்தான் எமது விபரங்களைக் கேட்டறிந்தார். அப்போது என்னிடம் தலைவர் கூறினார்."நீங்கள் சின்ன ஆளாகவும் மெல்லிய தோற்றத்தையும் கொண்டிருக்கிறீர்கள் பயிற்சி எடுக்கமுடியுமா?" நான்அதற்கு "நிச்சயமாக பயிற்சி எடுக்கத்தான் போகிறேன். உங்களின் இலட்சித்துக்கு கீழே நான் போராடுவதில் எந்த மாற்றமும் இல்லை" எனக் கூறினேன். நான் கூறியதுபோல் பயிற்சியில் நான் முதலாமிடமாக வந்து இந்தியாவிலேயே தலைவரின் கையால் பரிசு வாங்கினேன்.



பயிற்சியின் போது ஆண்களுக்குச் சமனான பயிற்சியே பெண்களுக்கும் வழங்கப்பட்டது.

எமது வேலைத் திட்டங்களையும், பயிற்சியின் போது எமது மனவுறுதியையும் தலைவர் அடிக்கடி வந்து பார்ப்பார். அப்போது எம்மில் ஒவ்வொருவருக்கும் தீர்க்க தரிசனம்மிக்க உறுதியான வார்த்தைகளைக் கூறுவார். இது எம் ஒவ்வொருவருக்கும் உற்சாகத்தை ஊட்டியது. முன்னர் பெண்கள் ஆயுதப்பயிற்சி எடுத்து என்ன செய்யப்போகிறார்கள்? என்ற ஒரு பார்வை இருந்தது. ஆனால் நாங்கள் ஆறுமாதத்தில் பயிற்சியை முடித்து களத்திலிறங்கி விக்ரர் அண்ணையின் கீழ் தாக்குதல்களில் ஈடுபட்டோம். மகளிர் பங்கேற்ற முதலாவது சண்டை அடம்பன் சண்டை. இதில் விக்ரர்அண்ணையின் கீழ் நாம் களத்தில் நின்று சண்டை பிடித்தோம். தலைவரின் எதிர்பார்ப்பிற்கேற்ப விக்ரர் அண்ணை எம்மை வளர்த்தார். இதில் சோகம் என்னவென்றால் விக்ரர் அண்ணை அந்தச் சண்டையிலே வீரச்சாவைத் தழுவிக் கொண்டது தான். அடம்பன் சண்டைக்குப்பின். எமது படையணி யாழ்ப்பாணத்தில் பல சண்டைக் களங்களில் நின்றது.

இந்த வகையில் அப்போது அடித்தளமிட்டனர் பெண்கள். இப்போது எல்லோரும் வியந்து பார்க்கக்கூடியளவுக்கு மகளிர் படையணியின் தோற்றமும் வளர்ச்சியும் எங்கையோ போய்விட்டது. இதே வேளை பெண் போராளிகளில் முதன் முதல் வீரச்சாவைத் தழுவிக்கொண்டவர் 2 ஆம் லெப். மாலதி. மாலதி அசைக்க முடியாத உறுதி கொண்டவள். தக்க வழிநடத்தலினால் இன்று பெண் போராளிகள் எல்லாத் துறைகளிலும் சாதனையாளர்களாக உள்ளனர். இவ்வாறாக எமது போராட்டம் பெண்களுக்குக் கொடுத்த துணிவும், பயிற்சியும் சமூகவாழ்க்கையில் கூட குடும்பச் சுமைகளை கணவனுக்கு இணையாக நின்று தாங்கிக் கொள்ளும் மனப்பக்குவத்தையும் உடல்வலுவையும், ஆற்றலையும் கொடுத்திருக்கிறது. இது வாழ்க்கையில் ஒரு நம்பிக்கையையும் கொடுத்திருக்கிறது.

எமது போராட்டத்தைப் பொறுத்தவரையில் விடுதலை ஒவ்வொருவருக்கும் முக்கியமான தொன்று. இதைப் பெற்றுக் கொள்ள நாங்கள் ஒவ்வொருவரும் முயற்சிக்கவேண்டும். எனக்கான விடுதலையை நானே பெற்றுக்கொள்ள வேண்டும் அந்த ரீதியிலே தமிழீழத்திலிருக்கின்ற ஒவ்வொரு பெண்ணும் எமது விடுதலைக்கான பங்களிப்பைக் கட்டாயம் செய்யவேண்டும். இது ஆயுதம் ஏந்தித்தான் போராட வேண்டுமென்றில்லை. இதில் பல பணிகள் உண்டு. அத்துடன் தன்னைத்தான் பாதுகாத்துக் கொள்ளக்கூடிய தற்துணிவு ஒவ்வொரு பெண்ணிடமும் இருக்க வேண்டும். அதற்கு அவர்கள் தங்களைத் தயார்ப்படுத்த வேண்டும். இந்த வகையில் தமிழீழத்திலே ஒவ்வொரு பெண்ணும் தன்னைத் தான்பாதுகாத்துக்கொள்ளக்கூடியவளாகவும் நாட்டுக்காகத் தன்னால் இயன்ற பணியைச் செய்யக் கூடியவளாகவும் உருவாகவேண்டும்.

*கேள்வி: களமுனைகளில் சகோதரப் படையணிகளுடன் இணைந்து செயற்பட்ட சாதக பாதக நிலைகள் பற்றி கூறமுடியுமா?(கேணல் துர்க்கா)*

பாதகமென்று சொல்லக்கூடியவாறு இருக்காது. படையணிகளின் பரஸ்பர உதவிகள் களத்தில் ஏற்படுகின்ற நிலைமைகளைப் பொறுத்துத்தான் அமையும். வேறுபடையணிகள் எமக்கருகில் நிற்கும் போது, எமது படையணியின் பகுதியில் இராணுவம் தாக்குதலை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் அடுத்த படையணி எங்களுக்கு உதவிக்கு வரும். அதே போல் அவர்களின் பகுதிக்குள் இராணுவ்ம் நடவடிக்கையை மேற்கொள்ளும் போது எமது அணிகள் அவர்களுக்கு உதவிக்குப்போகும்.

களத்தில் படைப்பிரிவுகள் நிற்கும் போது அவரவர் தமக்கென்று ஒதுக்கப்பட்ட கடமைகளை செய்யவேண்டியிருக்கும். ஆனால் இராணுவ நகர்வு நடக்கின்ற சந்தர்ப்பத்திலேதான் நான் குறிப்பிட்டமாதிரியான செயற்பாடு இருக்கும்.

*கேள்வி: களமுனையில் உங்களது படையணியின் செயற்பாடு தொடர்பாக கூறமுடியுமா?(கேணல் துர்க்கா)*

எமது படையணியின் முதலாவது சண்டை ஆனையிறவு பரந்தன் ஊடறுப்புத் தாக்குதல். அடுத்தகட்டமாக ஜெசிக்குறு காலப்பகுதியில் சின்னப் பூவரசங்குளச் சண்டையில் ஈடுபட்டோம். இது காட்டிற்குள் தனித்ததொரு இடத்தில் நடைபெற்ற சண்டை. புதிய போராளிகளைக் கொண்ட அணி ஆகையால் தனித்த சண்டைக்கு புதிதாக



முகம் கொடுக்கும் பொழுது ஒரு நம்பிக்கையீனம் இருந்தது. நெடுங்கேணியில் இருந்து புளியங்குளம் நோக்கி இராணுவம் முன்னேறலாம் என்ற எதிர்பார்ப்பில் தலைவர் அவர்கள் எம்மை அனுப்பியிருந்தார். அந்த வேளை அவர் எமக்கு மன ஓர்மத்தையும் ஊட்டியனுப்பினார். அங்கு நாம் முன்னேற முட்பட்ட இராணுவத்துடன் சண்டையிட்டு முன்னேற்றத்தை முறியடித்தோம். தலைவர் எமக்கு தனியாக சண்டை இடுவதற்கு தந்த சந்தர்ப்பங்கள் நாம் தனித்து பல சமர்களை எதிர்கொள்ளக் கூடிய ஆற்றலை வளர்க்க உதவியது. பின்பு நாம் ஓயாத அலைகள் 2,3 என அனைத்து நடவடிக்கைகளிலும், பிரதேசப் பாதுகாப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டோம்.

சண்டையில் போராளிகளுக்கு சிறிய இழப்பு வந்தாலும் எம்மைத் தலைவர் உடனே அழைத்து அந்த இழப்பு வந்ததற்கான காரணத்தை விளக்கி இனிமேல் இவ்வாறான தவறுகளை விடாதிருக்கும் அளவிற்கு அறிவுரை வழங்குவார். இதனையடுத்து அடுத்தடுத்த கட்டங்களில் தவறுகளைத் திருத்தி வெற்றிகளை குவிக்ககூடிய வாய்ப்புகள் ஏற்பட்டது. எமது தலைவர் எமக்கு சண்டைக் களங்கள் குறித்து வழங்கும் தீர்க்க தரிசனப் பார்வையைக் கொண்ட









ஆலோசனைகளால் நாம் பல வெற்றிகளையும் கண்டிருக்கிறோம். தலைவர் எமக்குரிய எல்லா விடயங்களிலும் கவனம் எடுப்பார். பயிற்சி முகாமிற்கு அடிக்கடி வரும் தலைவர் போராளிகளின் உடல்நிலைகளை கூடிய அக்கறை செலுத்துவார். சண்டைக்கு படையணி செல்லும் போதும் கூட கடைசி நேரத்திலும் நாம் கொண்டு செல்ல வேண்டிய பொருட்கள் குறித்து எமக்கு நினைவு படுத்துவார்.

தலைவரின் நேரடியான வழிகாட்டலில் இயங்கிய எமது படையணி குறுகிய. காலத்திலேயே சண்டைக்களங்களில் தனித்துவமான இடத்தை பெற்று விட்டது. இறுதியாக நடந்த தீச்சுவாலை எதிர் நடவடிக்கையின் வெற்றியில் பெரும் பங்கெடுத்து தலைவரின் பாராட்டைப் பெற்றது. எமது அணியில் புதிய போராளிகள் என்றாலும் பலரின் துணிகரமான செயற்பாடுகள் வெற்றிகளிற்கு காரணமாக இருந்தன.

***கேள்வி: தமிழ் மக்களிற்கு நீங்கள் கூற விரும்புவது என்ன? (கேணல் துர்க்கா)***

யுத்தநிறுத்தம் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று இறுதியில் தமது நாட்டை போராடி மீட்ட வரலாறுகளே அதிகம். உலகில் பல நாடுகளை இதற்கு உதாரணமாக கூறமுடியும். உயிரைக் கொடுத்துப் போராடிய பல இனங்கள் விடுதலை அடைந்துள்ளன. போராடாத இனங்கள் அழிந்துள்ளன. போராடித்தான் நாட்டை மீட்கவேண்டும் என்பது வெளிப்படையாகத் தெரியும் உண்மை. எமது இனம் அழிந்து விடாது பாதுகாப்பதற்கான யுத்தமொன்றை நடத்திக்கொண்டு தனித்துவமாக போராட்டத்தை முன்னெடுக்கும் தலைமை யாருக்கும் கிடைக்காது. இந்தக் காலத்தில் எமது நாட்டை மீட்க வேண்டியது எமது கடமை இதற்காக அனைவரும் உழைக்க வேண்டும்.

***கேள்வி: பல கள முனைகளில் மகளிர் படையணி பல சாதனைகளை புரிந்ததை நாம் அறிவோம் அவற்றில் சிலவற்றை குறிப்பிட முடியுமா?(கேணல் விதுசா)***

1990ம் ஆண்டு காலப்பகுதியில் நாம் பலாலியில் நிற்கும்போது எதிரியின் முன்னேற்ற முயற்சி ஒன்றை முறியடித்ததை இங்கு குறிப்பிடலாம். அதற்கு முன் அக்காலகட்டத்தில் நிலவிய களச்சூழலைப் பற்றி முதலில். குறிப்பிட வேண்டும்.

இக்காலப்பகுதியில் எமதணிகள் சண்டைகளில் ஈடுபட்ட அனுபவம் எதையும் பெற்றிருக்கவில்லை. ஆனால் பெருமளவான நிலப்பகுதியை எம்து கட்டுப்பாட்டில் வைத்திருந்த காலமது. தொண்டைமானாற்றிலிருந்து காங்கேசன்துறை வரையிலான பிரதேசங்களில் அணிகள் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தன. இந்தக் காலத்தில் மகளிர் படையணியின் பலம் தொடர்பான தப்பான அபிப்பிராயம் இராணுவத்திற்கு இருந்தது. இதனால் அடிக்கடி எமது பகுதி மீதான பல தாக்குதல்கள் இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்டன. அதாவது பதுங்கிச் சூடுகள், பதுங்கித் தாக்குதல்கள், எமது பகுதிக்குள் உள்நுழைந்து காப்பரண்கள் மீதான திடீர் தாக்குதல்கள் என்றவாறாக இருந்தன. இந்நேரத்தில் எமது போராளிகள் பெரும் நெருக்கடிகளைச் சந்தித்தனர். இந்த நிலையில் இராணுவ முகாமிற்கு நெருக்கமாக இருக்கும் எமது காவலரண்களில் நிற்கும் போராளிகள் குப்பியை வாயில் வைத்துக் கொண்டுதான் காவற் கடமையில் ஈடுபட்டார்கள். இந்நிலைமை தலைவருக்குத் தெரிய வந்ததும் “உங்களைச் சாவடைவதற்காக அங்கு நான் விடவில்லை. எதிரியைக் கொல்வதற்காகத்தான் அனுப்பியுள்ளேன். காவற்கடமையில் ஏன் பிள்ளைகள் வாயில் குப்பியை வைத்துக் கொண்டு நிற்கிறார்கள்? எதிரியின் கையிலுள்ள ஆயுதம் தான் உங்கள் கையிலும் இருக்கிறது. நீங்கள் சுட வேண்டுமே தவிர அதற்கு முன் குப்பி கடிக்கவேண்டுமென்ற சிந்தனை இருக்கக்கூடாது. இப்படித்தான் நிலைமை என்றால் நான் அவ்வளவு பிள்ளைகளையும் வெளியில எடுக்கிறன். இதை நீங்கள் அவர்களுடன் கதைத்து இப்பிரச்சினைக்கு முடிவெடுக்க வேண்டும்” என்று சொல்லி பின்னர் எதிரியின் நடவடிக்கைகளை எதிர்கொள்வதற்கான தந்திரோபாயங்களையும் சொல்லித தந்தார். நாம் அதற்கேற்ற விதத்தில் செயற்பட்டோம். இதன்பின்பு அவ்விடத்தில் எதிரியின் சில நகர்வுகளை சுலபமாக எதிகொண்டு தடுத்து நிறுத்தினோம்.

இத்தகைய சூழ்நிலையில்தான் ஒரு நாள் கட்டுவன் பகுதியில் எதிரியின் முன்னேற்ற முயற்சி ஒன்று நடைபெற்றது. அங்கு நின்ற கப்டன் அஜித்தாவின் அணி தாக்குதலை எதிர் கொண்டது. தாக்குதலின் முடிவில் ஓர் இராணுவத்தின் உடலையும், 40mm எறிகணை செலுத்தியையும் சில இராணுவத் தளபாடங்களையும் கைப்பற்றினோம். துருப்புகளை ஏற்றி வந்த கவசவாகனம் எம்மவரின் கால்கஸ்ரோ எறிகணைத் தாக்குதலால் சேதமடைய இராணுவம் இழப்புகளுடன் பின்வாங்கியது.

அக்காலத்தை பொறுத்தவரை எமது போராளிகள் எதிர்கொண்டு முறியடித்த வெற்றிகரமான தாக்குதலில் இதுவும் ஒன்றாகும். பின் நாம் கைப்பற்றிய அவ்வாயுதத்தை ‘பிள்ளைகள் கைப்பற்றிய ஆயுதம்’ எனச்சொல்லி தலைவர் அவர்கள் தன்னுடன்



வைத்திருந்தமை எமக்குள் மகிழ்வை ஏற்படுத்தியது. இத்தாக்குதலின் பின் எதிரியின் சிறிய அளவிலான எம்மைத் தொல்லைப் படுத்தும் பல நடவடிக்கைகள் எமது பகுதியில் வெகுவாக குறைந்து விட்டிருந்தன.

***கேள்வி: களமுனையில் நீங்கள் பெருமிதம் கொள்ளத் தக்கதும், துயர் கொள்ளத்தக்கதுமான ஓரிரு சம்பவங்களை எங்களு டன் பகிர்ந்து கொள்ள முடியுமா?(கேணல் விதுசா)***

ஓயாத அலைகள் 3 நடவடிக்கையில் தென்மராட்சி பகுதிக்குள் உள்நுழைந்த நாம் சாவகச்சேரி, அரியாலை, தனங்கிளப்பு, நுணாவில் போன்ற பகுதிகளை எமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்த பின் மீண்டும் இந்த இடங்களை கைப்பற்றுவதற்கு இராணுவம் முன்னேற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டது. இதன் போது நாம் சில சிறிய தாக்குதல்களை செய்தபடி தந்திரோபாயமாக பின்வாங்கி பளைப் பகுதிக்கு வந்த பின்பு கினிகிர 9 நடவடிக்கையை எதிரி ஆரம்பித்தான். இத்தாக்குதலையும் எமது அணிகள் எதிர்கொள்கின்றன. இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட பகுதிகளுடாக எதிரி உள்நுழைந்து விட சில இடங்களில் எமது பாதுகாப்பு அரணுக்கு முன்னாலும் சண்டை நடந்து கொண்டிருந்தது. இதேவேளை உள்நுழைந்த படைகளால் எமது அணிகளும் வேறுசில அணிகளும் சுற்றி வளைக்கப்பட்டுக் கொண்டிருந்தன. இந்தக் கட்டத்தில் எமக்கும் எதிரிக்கும் இடையே சண்டை உக்கிரமாக நடக்க சுற்றிவளைக்கப்பட்ட எமது போராளிகளை மீட்பதற்கு நாம் பல உத்திகளைக் கையாண்டு இந்த நடவடிக்கையில் வெற்றி கண்டோம்.

ஆனாலும் அந்தக் கள முனையில் வேறுபகுதியில் நடந்த ஒரு தாக்குதலில் எமது படையணியின் தளபதி ஒருவரை நாம் இழந்தோம். லெப் கேணல் மதி என்கின்ற இந்தப் போராளி நீண்ட காலமாக எமது படையணியின் வளர்சிக்காக பாடுபட்டவர். இவரின் இழப்பு என்பது நாங்கள் பெற்ற வெற்றி என்பதை விட அதிகமானதாகவே இருந்தது.

இன்னுமொரு சம்பவத்தை சொல்வதானால் எமது அணிகள் நெடுங்கேணிப் பகுதியில் நிற்கும்போது அதாவது ஜெயசிக்குறுவின் ஆரம்ப காலப்பகுதியில் தலைவர் அவர்கள் ‘விளக்கு வைத்தகுளம் பகுதியிலிருந்து முன்னேறி வரும் இராணுவத்தின் நகர்வை தடுத்து நிறுத்துவதற்காக புளியங்குளப் பகுதிக்குச் சென்று காப்பரண்கள் அமைத்து முதல் தாக்குதலை முறியடிக்க வேண்டும் என்று சொன்னார். அத்தோடு குறிப்பிட்ட தொகை எறிகணைகளையும் தந்து நாமே பாதுகாப்பரண்களுக்குரிய இடங்களைத் தெரிவு செய்து நிலைகளை அமைக்குமாறும் சொல்லியிருந்தார். இந்த நிலையில் இராணுவத்தின் தாக்குதல்கள் தொடங்குவதற்கு இரு நாட்கள் முன்பு தான் நாம் அவ்விடத்திற்கு சென்றோம். பழக்கப்படாத அந்த பிரதேசத்தில் குறிப்பிட்ட நாட்களுக்குள் காப்பரண்கள் போதியளவு அமைக்கப் படவில்லை. எமது பகுதிக்குள் மோட்டார்களைக்கூட நிலைநிறுத்தவில்லை இந்தக் கட்டத்தில் நாங்கள் எதிர் பார்த்ததிற்கு மாறாக எதிரி முதல் நாளே முன்னேற்ற நடவடிக்கைக்கான தாக்குதலை ஆரம்பித்தான். இதன் பின்னர் தான் நாங்கள் தொலைத் தொடர்புகளையும் ஏற்படுத்தி மோட்டார்களையும் நிலைப் படுத்தினோம். இதற்கு முதல் மேஜர் அரசி தலைமையில் ஐந்து போராளிகளை இராணுவ முன்னிலைகளுக்கு அவர்களின் செயற்பாடுகளை அவதானிப்பதற்காக அனுப்பியிருந்தோம். இராணுவ தாக்குதல் தொடங்கிய அன்று அதிகாலை 3.00 மணியளவில் அரசி இன்று நிலைமை வித்தியாசமாக இருக்கு. இராணுவத்தின் நடமாட்டம் அதிகரித்து டாங்கி சத்தமும் கேட்குது. நகரப் போகிறான் போல. இருக்கு என்றார். அதன் பின் இராணுவத்தின் ஆரம்பகட்ட நகர்வை எதிர்கொண்டு எதிரியின் முன்நகர்வை குறிப்பிட்ட நேரம் தக்கவைத்த மேஜர் அரசியின் அணி, நாங்கள் போராளிகளையும், மோட்டார்களையும் நிலைப்படுத்தி தாயார்படுத்துவற்கான நேரத்தைத் தந்திருந்தது. மேஜர் அரசி உட்பட அந்த ஐந்து போராளிகளும் தான் சண்டை தொடங்கிய 5.00 மணியிலிருந்து 6.15 மட்டும் இராணுவத்தினரின் நகர்வை தாமதப்படுத்திக் கொண்டிருந்தனர். எமது அணி தயாராகியதும் வேவு போராளிகளை பின்னே வரச் சொல்லி விட்டு பாதுகாப்பு நிலையில் எதிரியை அணிகள் எதிர் கொண்டன. காலையில் தொடங்கிய சண்டையில் இராணுவம் உக்கிரமான தாக்குதலை நடத்தியது. இத்தாக்குதலில் எம்மவரின் பதுங்குகுழிகள் மூடப்படும் அளவிற்கு இராணுவத் தாக்குதல் இருந்தது. இந்த நிலையிலும் அணிகள் இராணுவத்தை உள்ளே நுழையவிடவில்லை. அப்போது மேஜர் திரேசா என்கின்ற போராளி “எனக்கு இடப்பக்கம் வலப்பக்கம் எல்லாப் போராளிகளும் காயமும், வீரச்சாவும். ஆனாலும் நான் ராங்கியிலிருந்து இறங்கி வரும் துருப்புகளை அடிப்பன். ஆனால் ராங்கிக்கு நீங்கள் ஏதாவது செய்ய வேண்டும்” என எனக்கு அறிவித்தார். அவர் வைத்திருந்த ஆயுதம் P.K அதை வைத்து ராங்கியை அடிக்கமுடியாது. மற்றது R.P.G யாளர் வீரச்சாவு. இந்த நிலையில் வீதிக்கு இடதுபக்கம் நின்ற R.P.Gயாளரை அந்த இடத்திற்கு நகர்த்தி வைத்தி ருந்தோம். காலைச் சண்டையில் ஒரு ராங்கி கண்ணி வெடியில் சிக்கியது. இந்த நிலையில் நண்பகல் 1.00 மணியளவில் சண்டை நின்றுவிட்டது. இந்தக் கட்டத்தில் புளியங்குளம் தங்களின் கட்டுப்பாட்டில் வந்துவிட்டதாக சொல்கிறது சிறீலங்கா அரசின் வானொலி. இன்றே மீண்டும் ஒரு சண்டை இருக்கிறது என்பதை புரிந்து கொண்டு அதற்கிடையில் எமது அணித்தலைவர்களையும் போராளிகளைளையும் தயார்ப்படுத்தி தூர்ந்த அகழிகளையும் திருத்தியமைத்து அடுத்த சண்டைக்குத் தயாரானோம்.

நாம் எதிர்பார்த்தபடியே அடுத்த நடவடிக்கையை இராணுவம் தொடங்கியது. அதுவும் டாங்கிகளின் உதவியுடனான பெரிய நகர்வாக இராண்டாம் கட்ட

→





தாக்குதல் அமைந்தது. அதாவது நகர்வுப் பாதைகள் எதுவென எங்களுக்கு விளங்கிவிட்டது. திரும்ப R.P.G உடன் நின்ற பிள்ளைகளை எடுத்து பக்க வாட்டாக புகையிரத ஓடுபாதையில் எங்களின் நிலையைவிட குறிப் பிட்டதூரம் முன்னே நிலைப்படுத்தி விட அப்போராளிகளால் முன்னுக்கு நகர்ந்த ராங்கிகளின் நடவடிக்கை முறியடிக்கப்பட்டது. அதன் பிறகு ராங்கிகளை எமக்கு நெருக்கமாக கொண்டுவரவில்லை இதில் பெண்போராளிகளின் மோட்டார் பிரிவும் துல்லியமான தாக்குதலை நடத்தியது. மீண்டும் எதிரி இழப்புகளுடன் பின்வாங்க வேண்டியதாயிற்று.

***கேள்வி: மகளிர்படையணியின் ஆரம்பகாலப் பணிக்கும் தற்போதையகாலப் பணிக்கும் இடையில் வேறுபாடு உண்டா?***

(கேணல் விதுசா)

ஆரம்பகாலத்தில் அரசியல்பணிஎன்றாலும் சரி, தாக்குதல் பணியென்றாலும் சரி நாம் தனித்து செயற்படக்கூடிய



சந்தர்ப்பங்கள் இருக்கவில்லை. ஆண் போராளிகளுடன் இணைந்தே எமது செயற்பாடுகளை செய்தோம். சிறுவிடயமானாலும் சரி சார்ந்திருக்கக் கூடியநிலையே அன்று காணப் பட்டது எடுத்துக்காட்டாக கூறப் போனால் இந்திய இராணுவக் காலப்பகுதியில் நடைபெற்ற சிறு தாக்குதல்களானாலும் ஆண் போராளிகளுடன் இணைந்தே மேற்கொண்டோம். ஆரம்பத்தில் விடுதலைப் போராட்டத்தில் பெண்போராளிகளை இணைக்கும் போது தலைவரின் சிந்தனையில் ஆழமாக இருந்தது என்ன வென்றால் 'பெண் போராளிகள் முழுஅளவில் தனித்து இயங்க வேண்டும்' என்பதுதான். இந்த அடிப்படையில் பெண்போராளிகள் தனித்து இயங்குவதற்கான அடித்தளம் மணலாற்றுப் பகுதியில் இடப்பட்டது. மணலாற்றுக் காட்டுப் பகுதியில் தலைவருடன் இருந்த காலப்பகுதியில் நாம் தனித் தியங்குவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் சிலவற்றை அங்கு எங்களின் பொறுப்பாளர்களிடம் கொடுத்திருந்தார்.

இதில் முக்கியமாக மேஜர் சோதியா அவர்களிடம் முழுமையாக கடமைகள் வழங்கப் பட்டிருந்தது. அதாவது பெண் போராளிகளிற்கான முகாமொன்று அமைக்கப்பட்டு அந்த முகாமின் பாதுகாப்பு, நிர்வாக ரீதியான வேலைத்திட்டங்கள் அனைத்தையும் தனித்துவமாக நின்று செயற்படும் படியாக மேஜர் சோதியா அவர்களிடம் வழங்கப் பட்டது. இது முதலாம் கட்டம் என்று கூறலாம்.

அடுத்தபடியாக மணலாற்றுக் காட்டுப்பகுதியிலிருந்து நாம் வெளியில் வந்து யாழ் மாவட்டத்தில் பலாலி, தொண்ட மானாறு, யாழ்.கோட்டை, மணற்காடு, பருத்தித்துறை போன்ற கடற்கரைப் பகுதிகளிலும் இராணுவ முகாம் களைச் சூழவுள்ள பகுதிகளிலும் பாதுகாப்பரண்களை அமைத்து பல கிலோ மீற்றர் நீளமான பகுதிகளில் நின்று பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டோம். ஆனாலும் சிறிய தாக்குதல் நடவடிக்கைகள் என்றாலும் வெளியிலிருந்து கேட்டுச் செய்ய வேண்டிய நிலையிலேயே இருந்தோம். குறிப்பாக சொல்வ தானால் கொக்காவில், மாங்குளம், ஆனையிறவு (ஆ.க.வெ) போன்ற எம்மால் திட்டமிடப்பட்ட தாக் குதல்களிலும், அக்காலப்பகுதியில் நடைபெற்ற எதிரியின் முன்னேற் றத்தை முறியடிக்கும் நடவடிக் கைகளிலும் பெண் போராளிகளின் திறமையான செயற்பாடு காரண மாக மகளிர் படையணி அடுத்த கட்ட வளர்சியைப் பெற்றது. தாக்கு தல் நடவடிக்கைகளில் பணிகளை நம்பித் தந்ததுடன் சில கட்டங்களில் ஏற்பட்ட பின்னடைவுகளிற்கு அறிவுரை தந்து மீண்டும் பணிகளை செய்வித்ததனூடாக மென்மேலும் வளர்ச்சியடையக்கூடிய சூழலை தலைவர் அவர்கள் ஏற்படுத்தி யிருந்தார்.

அடுத்த கட்டவளர்சி நிலை என்று நான் எதனை குறிப்பிடுகின்றேன் என்றால் அது சூரியக்கதிர் இராணுவ நடவடிக் கையின் எதிர் நடவடிக்கை ஆகும். இந்த எதிர்நடவடிக்கையில் பெரு மளவில் பங்கெடுத்தோம். இந்த அனுபவங்கள் எல்லாம் எம்மை மேலும் வளர்த்தது. இதனைத் தொடர்ந்து வன்னிக்கு வந்த பின் ஜெயசிக்குறு சமரில் எமக்கு தரப்பட்ட பகுதியில் முற்று முழுதான நடவடிக்கைகளை நாமே முடிவெடுத்து செயற்படுத்தினோம். தேவையான கட்டளைகளையும் நாமே வழங்கினோம். அதன்பின் னரான அநேகமான நடவடிக் கைகளில் நாங்களே தனித்து நின்று செய்யக்கூடிய நிலை காணப் பட்டது. எடுத்துக்காட்டாக ஜெய சிக்குறு எதிர் நடவடிக்கையில் மகளிர் மோட்டார்அணி, கண்ணி வெடிப்பிரிவு என்பன தனித்துவமாக இயங்க ஆரம்பித்தன. இது மகளிர் படையணியின் தாக்குதல் நட வடிக்கையின் வளர்சிப் பாதையில் குறிப்பிட்ட முன்னேற்றத்தை ஏற்படுத்தியதாக அமைந்திருந்தது.

இவ்வாறே அனைத்துப் பணிகளிலும் தனித்துவமான செயற்பாட்டுடன்கூடிய வளர்சி போக்கை மகளிர் படையணி அடைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

நேர்காணல்:
கெல்மன்,துஷ்யந்தன்

# கிணறுகட்டும் வேலை நடைபெறுகையில் தொங்குசாரத்தின் கயிறு அறுந்தது

## - கட்டுவேலையில் ஈடுபட்ட மூவர் படுகாயம்

(முள்ளியவளை)

முள்ளியவளை நாவற்காடு கிராமத்தில் நியாப் திட்டப் பொதுக் கிணறு கட்டுவேலைநடைபெற்றுக் கொண்டிருந்த போது திடீரென தூக்குசாரக்கயிறு அறுந்ததினால் கட்டுவேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மூவர் கிணற்றுக் குள் வீழ்ந்து படுகாயத்துக்குள்ளா கினர். இவர்கள் முள்ளிவளை வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச் சைக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்டப்பட்டு அங்கு அவசர சிகிச்சைக்குள்ளாக் கப்பட்டுள்ளனர்.

மேற்படி சம்பவத்தில் முள்ளிய வளை 2ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஜெகநாதன், பொன்நகர் முள்ளியவளையைச் சேர்ந்தவர் களான சுரேஸ்,கணேஸ் ஆகியோர் படுகாயத்துக்குள்ளாகி சிகிச்சை பெற்றுவருகின்றனர். மேற்படி சம்பவம் தொடர்பாகத் தெரிவிக்கப் படுவதாவது: கிணறுகட்டி முடிவ டையும் நிலையில் உள்ளபோது சுமார் 45 அடி ஆழமான கிணற் றுக்குள் கயிறு அறுந்ததும் மூவ ரும் கிணற்றுக்குள் வீழ்ந்து கொண்டிருக்க சாரத்தில் உள்ள கற்கள் சீமெந்து சாந்து சாந்துத் தட்டு சாரத்திற்கு போடப்பட்ட பல கற்கள் என்பன அவர்கள் மேல் வீழ்ந்தே பாரிய படுகாயங்களை ஏற்படுத்தியுள்ளதாகப் தெரி விக்கப்படுகின்றது. மேற்படி சம்பவம் கடந்த 14ஆம் திகதி காலை.9.30 மணிக்கு நடை பெற்றது. இதனையடுத்து வேலை யாட்கள், அவர்களின் உதவி யாளர்கள் அயலவர்களால் மீட் கப்பட்டு வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.(ஆ)

# ஊரக தேசிய எழுச்சிப் பேரவை புதிய நிர்வாகம் தெரிவு

(முள்ளியவளை)

முள்ளியவளைக் கோட்டதேசிய எழுச்சிப்பேரவையின் பொன்நகர் ஊரக தேசிய எழுச்சிப் பேரவை புதிய நிர்வாகத் தெரிவுக் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை பி.ப.3.30 மணிக்கு பொன்நகர் பாடசாலை மண்டபத்தில் ஊரக தேசிய எழுச் சிப்பேரவை செயலாளர் க.அமிர் தலிங்கம் தலைமையில் அக வணக்கத்துடன் ஆரம்பமானது.

மேற்படி கூட்டத்தில் ஊரக தேசிய எழுச்சிப் பேரவையின் செயற்பாடு தொடர்பாகவும் அதன் முக்கியத்துவம் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதையடுத்து புதியநிர்வாகத் தெரிவு இடம்பெற் றது செயலாளராக க.அமிர்த லிங்கம், பொருளாளராக இரத்தின சிங்கம் ஆகியோருடன் 9 உறுப் பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

தேசிய எழுச்சிப் பேரவை யின் யாப்பு தொடர்பாகவும் தேசிய எழுச்சிப் பேரவையின் செயற்பாடு தொடர்பாகவும் சமகால அரசியல் நிலைதொடர்பாகவும் சிறப்பு கருத்துரையினை முள்ளியவளை கோட்டத் தேசிய எழுச்சிப்பேரவை செயலாளர் கி.தியாகராசா முள் ளியவளை பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் இ.நாகமைந் தன் ஆகியோர் வழங்கினர். (ஆ)

## அனுமதியின்றி மணலேற்றிய நபர்கள் மீது நடவடிக்கை

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்புப் பிரதேச சபையின் அனுமதியின்றி மணல் ஏற்றிய இரண்டு உழவு இயந் திரங்களை புதுக்குடியிருப்பு காவல் துறையினர் தடுத்துவைத்துள்ளனர்.

இம்மணல் ஏற்றியவர் களுக்கு எதிரான நடவடிக்கையை யும் அவர்கள் மேற்கொண்டுள் ளனர்.

புதுக்குடியிருப்புப் பிரதேச சபையினால் மணல் ஏற்று வதற்கு தடை செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்ட பிரதேசங்களில் மணல் ஏற்றியவர்களுக்கு எதி ராகவே நடவடிக்கை எடுக்கப்பட்ட தாகக் காவல்துறையினர் தெரி வித்துள்ளனர். 08)

# கற்பூரப்புல் பொதுமயானப் பகுதி காடாக உள்ளமையால் சிரமம்

முள்ளியவளைப் பிரதேசத்தில் உள்ள கற்பூரப்புல் பொது மயானப்பகுதி பற்றைகள் வளர்ந்து காடாக உள்ளமையின் காரணமாக இறுதி ஊர்வலகங்களின் பொழுது மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்வதனை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இதன் காரண மாக இறந்தவர்களின் உடல்களை மயானத்தினுள் எடுத்துச் செல்லும் பொழுது பெரும் சிரமங்களுக்கு ஆளாக வேண்டிய நிலை காணப் படுகின்றது.

மேற்படி முள்ளியவளை கற் பூரப்புல் பொது மயானத்தில் உள்ள பற்றைக்காடுகளை அகற்றுவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் உடன் உரிய நடவடிக்கை மேற்கொண்டு மயான வளாகத்தினை துப்புரவு செய் விக்க முன்வர வேண்டுமென அப் பகுதி மக்கள் கேட்டு வருகின்ற னர்.மேற்படி மயானம் காடாகவுள் ளமையினால் சடலங்களை வீதி ஓரங்களில் தகனம் செய்தும் அடக் கம் செய்தும் வருகின்றனர். இத னால் வீதியூடாகச் செல்வோர் அசௌ கரியங்களுக்குள்ளாகி வருவது டன் சுகாதாரச் சீர்கேடுகளும் ஏற் பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக் கது. (ஆ)

## குடிநீருக்கு தட்டுப்பாடு

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் கடும் வரட்சி காரணமாக குடிநீருக் குப்பெரும் தட்டுப்பாடு நிலவி வரு கின்றது. கிணறுகளில் நீர் வற்றியுள்ளதால் மக்கள் பெரும் அவலத்தை எதிர்நோக்கிவருகின்ற னர்.குளிப்பதற்காக கேப்பாப்புலவு முக்கணவன் பகுதிக்கு மக்கள் செல்வதை அவதானிக்கமுடி கின்றது. (08)

# பிரதேச வானொலி மன்ற புதிய நிர்வாகம் தெரிவு

(முள்ளியவளை)

புலிகளின் 'குரல் நிறுவனத்தின் முள்ளியவளைப் பிரதேச வானொலி மன்ற புதிய நிர்வாகத் தெரிவு விசேட பொதுக் கூட்டம் 13.08.2004 பிற்பகல் 4.30 மணிக்கு முள்ளியவளை தமிழ் வித்தியா லய ஒன்று கூடல் மண்டபத்தில் முள்ளியவளைப் பிரதேச வானொலி மன்றத்தலைவர் ந.பாஸ்கரன் தலைமையில் அகவணக்கத்துடன் ஆரம்பமானது.

மேற்படி நிகழ்வின் ஆரம்பத் தில் புலிகளின் குரல் வானொலி மன்ற இணைப்பாளர் கபிலன், புலிகளின் குரல் நிறுவனப் பொறுப் பாளர் நா.தமிழன்பன், முள்ளிய வளை தமிழ் வித்தியாலய அதிபர் சு.வீரசிங்கம் ஆகியோர் கருத் துரை வழங்கியதைத் தொடர்ந்து, புதிய நிர்வாகத் தெரிவு ஆரம்ப மாகியது. வானொலி மன்றத் தலைவராக கா.யோகரட்ணம் செயலாளராக தனயோகநாயகன், பொருளாளராக செ.ஈஸ்வரமூர்த்தி ஆகியோருடன் உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். இந்நிகழ்வில் முன்னாள வானொலி மன்ற இணைப்பாளர் கொலின்ஸ் முள்ளி யவளைப் பிரதேச அரசியல் துறை நிர்வாக இணைப்பாளர் ந.கலை வாண்ணன் ஆகியோருடன் பெருமள வானோர் கலந்துகொண்டனர். (ஆ)

# ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பதில் தாமதம் இவ்வாண்டிற்கான திட்டங்களை யுனிசெவ் நிராகரிப்பு

### -பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் தகவல்



(முல்லைத்தீவு)

அம்பலவன் பொக்கணை ஆரம்ப சுகாதார நிலையம் இன்னமும் முடிவுறுத்தப் பெறாமல் இழுபறிநிலையில் இருக்கின்றது என்று முல்லை.மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் கவலை தெரிவித்தார்.

2003ஆம் ஆண்டு யுனிசெவ் நிறுவனம் முல்லை. மாவட்டத்தில் 10 ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பதற்கான நிதி உதவியை வழங்கியது.அதில் 6ஆரம்ப சுகாதார நிலையங்கள் பூர்த்தி செய்யப்பட்டு உரியவர்களிடம் கையளிக்கப்பட்ட போதும், நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் இதுவரை முழுமையாக முடிவுறுத்தப்படாமல் இருக்கிறதென்றும், அம்பலவன் பொக்கணை, கரிபட்டமுறிப்பு, அளம்பில், முத்துஐயன்கட்டு ஆகிய நான்கு ஆரம்பசுகாதார நிலையங்களே இவை எனவும், இவற்றுக்கான வேலைகளை முடிவுறுத்தித்தராததனால் 2004இல் யுனிசெவ் திட்டங்களை நிராகரித்துள்ளது என்றும் மேலும் தெரிவித்தார். மக்களுக்கு பெரும் பயனளிக்கும் இவ் ஆரம்பசுகாதார நிலையங்களை உரிய முறையில் சம்பந்தப்பட்டவர்கள் இம்மாதம் முடிவதற்குள் கையளித்தல் வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார் (20)

### ஓகஸ்ட் 20 முதல் 24 ஆம் திகதி வரை

## முல்லை மாவட்டத்தில் கிராம ரீதியாக குழந்தைகள், கர்ப்பவதிகள் போசாக்கு ஆய்வு

(முல்லை)

உலக உணவுத்திட்டத்தின் நிதியுதவியுடன் முல்லை மாவட்டத்தில் கிராம ரீதியான போசாக்கு ஆய்வு எதிர்வரும் ஓகஸ்ட் 20 தொடக்கம் 24 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதில்குழந்தைகள், கற்பவதிகளின் போசாக்கு தொடர்பான ஆய்வேகிராம ரீதியாக நடாத்தப்படவுள்ளது.

இதில் முல்லை மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைப் பணியாளர்கள், சுகாதார தொண்டர்கள், மருத்துவ மாதுக்கள், பொது சுகாதாரப் பரிசோதகர்கள் ஆகியோர் கலந்து கொள்ள வுள்ளனர்.

முன்னதாக போசாக்கு ஆய்வு தொடர்பான முன்னோடிக் கலந்துரையாடல் நேற்று முன்தினம் காலை 9.30 மணிக்கு முல்லை மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இடம் பெற்றது. முல்லை மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி .து.வி. ஜெயக்குலராஜா தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் உலக உணவுத் திட்டப் பிரதிநிதி சு.ராதிகா, சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைப் பணியாளர், மருத்துவ மாதுக்கள், சுகாதார தொண்டர்கள்,பொது சுகாதாரபரிசோதகர்கள், மேற்பார்வை மருத்துவ மாது ஆகியோர் கலந்து கொண்டனர். (20)


மு/புதுக்குடியிருப்பு ப.நோ.கூ. சங்கம் [வ.து]
சைக்கிள் புதிய உதிரிப்பாகங்கள், லொறிக்குரிய பழைய ரயர்கள்

## ஏலத்தில் விற்பனை

மேற்படி புதுக்குடியிருப்பு ப.நோ.கூ. சங்கத்திற்கு சொந்தமான சைக்கிள் புதிய உதிரிப்பாகப் பொருட்கள், லொறிக்குரிய பழைய ரயர்கள் ஆகியன 2004.08.21 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு தலைமைப்பணிமனையில் ஏலத்தில் விற்பனைக்கு விடப்படவுள்ளன. எனவே மேற்படி பொருட்களை ஏலத்தில் பெற விரும்புவோர் குறித்த திகதியில் தலைமைப்பணிமனைக்கு சமுகம் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தலைவர்,
புதுக்குடியிருப்பு,
ப.நோ.கூ.சங்கம் (வ.து)

(சி-9177)



SRI LANKA RED CROSS SOCIETY

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
கிளிநொச்சி மாவட்டக் கிளை.

## வருடாந்த பொதுக்கூட்டமும், ஆளுநர் சபைத் தெரிவும்.

மேற்படி நிகழ்வு எதிர்வரும் 03.10.2004 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு நிறுவனக் கேட்போர் கூடத்தில் நிறுவனத் தலைவர் திரு. கா.கார்த்திகேசு தலைமையில் நடைபெறவுள்ளது.

ஆளுநர் சபைக்கான தலைவர், உப.தலைவர், செயலாளர் பொருளாளர் மற்றும் 6 நிர்வாக உறுப்பினர்களுக்கான வேட்புமனுக்கள் மாவட்டப் பொதுச் சபைப் பிரதி நிதிகளிடமிருந்து கோரப்படுகின்றன. வேட்புமனுக்களை மாவட்டக்கிளையில் பெற்றுப் பூர்த்தி செய்து 06.09.2004 திங்கட்கிழமை பி.பகல் 4.30 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

இக்கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "தேர்தல்– 2004" எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். மேலதிக விபரங்களை கிளைச் செயலாளரிடம் அல்லது கிளை நிறைவேற்று அலுவலரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

க.கணேஸ்,
கௌரவசெயலாளர்,

(சி.9791)


## ஐந்தாம் ஆண்டு நினைவில்

தாயின் மடியில்
08 - 12 - 1983



தாயக மண்ணில்
19 - 08 - 1999

## வீரவேங்கை சிவா

### தர்மலிங்கம் ராஜ்அனந்தன் (டமி)

1ஆம் வட்டாரம் முள்ளியவளை

மகனே!
இல்லறத்தைச் சிறப்பிக்க
கருவறையில் முத்தாகி
வல்லரசை வெல்லச் சென்று
கல்லறையினில் வித்தானீரோ!
வீரத்தாய் என்ற பட்டியலில்
நானும் ஒருத்திதான்-ஆனால்
உன்னை நினைக்கையிலே-கண்ணா
உள்ளம் வெடிக்குதடா
கல்லறையில் தூங்குகிறாய் என்றறிந்து
கை நிறைந்த மலர்களோடும்
நீர் நிறைந்தவிழிகளோடும் சுமைநிறைந்த இதயத்தோடும்
உன்னைக் காண ஓடி வந்தேன்
மகனே!
நீ எங்கே ஒளிந்துகொண்டாய்
தேடினேன் காணவில்லை-கூவி
அழைத்தேன் கேட்கவில்லையா?
எங்கு இருக்கின்றாய் என்று
ஒரு வார்த்தை கூறிவிடு-இல்லையேல்
எம் உடலில் உயிர் உள்ளவரை
உம்மை தேடிக்கொண்டே இருப்போம்.

19.08.2004 வியாழக்கிழமை அன்று எமது இல்லத்தில் நடைபெறும் நினைவு நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
அம்மா, சகோதரர்கள்.

(4682)

# சாவு அறிவித்தல்



## இளையதம்பி தெய்வமணி


வடமராட்சி கிழக்கு வேம்படியை நிரந்தர முகவரியாகவும், விசுவமடுவைத் தற்காலிக முகவரியாகக் கொண்ட சுப்பிரமணியம் தம்பதிகளின் அன்பு மகளும், இளையதம்பியின் அன்பு மனைவியுமாகிய தெய்வமணி அவர்கள் 17.08.2004 அன்று காலமானார். அன்னார் இளையதம்பியின் அன்பு மனைவியும், தனபாலசிங்கம் (இமைசோலை அழகுமாடம் புதுக்குடியிருப்பு உரிமையாளர்), தமிழ்ச் செல்வி, விஜயசிங்கம் (நிகல்யா புடவையக உரிமையாளர் விசுவமடு), கதிர்காமநாதன் (நோர்வே) அமிர்தநாதன் (டென்மார்க்), தேவரஞ்சிதம், தெய்வசோதி (நோர்வே) தெய்வராணி(சுவிஸ்), தெய்வரஜனி (ஆசிரியை விசுவமடு ம.வி.) ரகுநாதன் (லண்டன்) தெய்வமதி, தெய்வசிறி (யாழ்.பல்கலைக்கழகம், ஆகியோரின் அன்புத் தாயாரும், முத்துராசா (T.M.R வாணிப உரிமையாளர் வேம்படி), புனிதவதி, இராசலட்சுமி, இந்திராணி (நோர்வே), விஜயரஞ்சனா (டென்மார்க், சாந்தகுமார், சிவசோதி (நோர்வே), இராசகுமார் (சுவிஸ்) ஜெயபாலன் (ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜெகதீஸ் (கப்டன் இளங்கதிர் மாவீரர்) ஜெயகான் (லண்டன்) யசோ, ஜெனந்தன் ஜெசீதன், சுதர்ஜினி(பி.செ.புதுக்குடியிருப்பு) சிவாஜினி (நோர்வே) சுபேதினி, சுகாசினி, அனுசியா, விஜேந்திரன், விஜயசோபனன், நிசாந்தினி, நிதர்சினி, நிகழ்யா, பிரவினா(நோர்வே), இந்துசன் (நோர்வே), சுவெய்கா (டென்மார்க்), விதுசன் (டென்மார்க்), மிரேஸ், கமலேஸ், சுகனேஸ்? பிரதீன், கிருபா (நோர்வே) பவிதன் (நோர்வே), கவீதன் (சுவிஸ்), வின்துஷன் ஆகியோரின் பேர்த்தியும், பிரவினினின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 19.08.2004 காலை 10.00 மணியளவில் அன்னாரது தற்காலிக இல்லத்தில் நடைபெற்று விசுவமடு இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

தகவல்:-
குடும்பத்தினர்.

(4972)





பெண்களுக்கான சைக்கிள் ஓட்டத்தில் அமெரிக்காவின் ஹமிஸ்ரன் போட்டியிடுகின்றார்.




31ஆவது நெடுந்தூர சவாரியின் போது அவுஸ்திரேலியாவின் அன்ட்டுஹோப் தனது குதிரையில் இருந்து கீழே விழுகிறார்.



10 மீற்றர் டைவிஸ் இறுதிப் போட்டியில் பங்குபற்றும் கனடாவின் ப்ளைத் ஹாட்லி (இடது) எமினவோமன்ஸ்.



ஆண்களுக்கான "ஈபீ" போட்டியில் பங்கேற்கும் அமெரிக்காவின் கோடி மற்றேன் (வலது) மற்றும் ஹங்கேரியின் இவான்கொவாக்ஸ்



ஆண்களுக்கான 50 மீற்றர் பிஸ்ரல் சுடும் போட்டியில் குறி பார்க்கும் ரஷ்யாவின் மிக்கேய்ல் நெஸ்ரூவ்.



பெண்களுக்கான அம்பெய்தல் போட்டியில் ஜப்பானின் காவாஷி ஷயோகோ வின் அம்பு வில்லின் நடுவே காணப்படுகின்றது.

# இங்கிலாந்து அணிக்கு 7 விக்கெட் வெற்றி

# போட்டித் தொடரையும் கைப்பற்றியது



இங்கிலாந்து அணிக்கும் மேற்கிந்தியத் தீவு அணிக்கும் இடையில் மான்செஸ்டரில் நடைபெற்ற மூன்றாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

231 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 3 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

மேற்கிந்தியத்தீவு முதல் இனிங்ஸ்சில் 395 ஓட்டங்களையும் இங்கிலாந்து அணி முதல் இனிங்சில் 330 ஓட்டங்களையும் பெற்றன.

இங்கிலாந்து அணி துடுப்பாட்டத்தில் கிரஹம் தோப் 114 ஓட்டங்களையும், அன்ரூஸரோஸ் 90 ஓட்டங்களையும் பெற்றனர்.

முதலாவது இனிங்சில் 65 ஓட்டங்கள் மேலதிகமாகப் பெற்றிருந்த மேற்கிந்தியத்தீவு அணி வெற்றிக் கனவுடன் களமிறங்கிய போதும் இங்கிலாந்து அணியின் துல்லியமான பந்துவீச்சில் 165 ஓட்டங்களுக்கு தமது விக்கெட்டுக்கள் அனைத்தையும் பறிகொடுத்தது.

மேற்கிந்திய அணியின் துடுப்பாட்டத்தில் சர்வான் 60 ஓட்டங்களையும் கிறிஸ்ஹெய்ல் 48 ஓட்டங்களையும் பெற்றது.

மேற்படி வெற்றி மூலம் 4போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை இங்கிலாந்து அணி 3-0 என்ற நிலையில் கைப்பற்றியது.

## இந்திய கிரிக்கெட் வீரர்களுக்கு ஒப்பந்த முறைக்கு அனுமதி

இந்தியக்கிரிக்கெட் வீரர்களுக்கு தரம் வாரியாக ஒப்பந்த முறை ஊதியம் வழங்கும் திட்டத்திற்கு சபை செயற்குழுவில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இந்திய கிரிக்கெட்சபை செயற்குழுக்கூட்டம் கொல்கத்தாவில் நேற்று முன்தினம் நடந்தது. இந்தக் கூட்டம் முடிந்ததும் இந்திய கிரிக்கெட்சபை தலைவர் ஜக்மோகன் டால்மியா நிருபர்களிடம் கூறியதாவது:- இந்திய கிரிக்கெட் வீரர்களுக்கு ஒப்பந்த முறை யில் ஊதியம் வழங்கும் திட்டத்தை சபை செய்துள்ளது. இதற்கு வீரர்களும் ஒப்புதல் அளிக்கின்றனர் என்றார்.

## டெஸ்ட் தரவரிசையில் ராவிட், முரளிக்கு முதலிடம்

றைஸ்வோட்டஹவுஸ்கூப்பர் டெஸ்ட் கிரிக்கெட் தரப்படுத்தலில் பந்துவீச்சாளர் தரவரிசையில் சமிந்தவாஸ் ஒன்பதாவது இடத்தைப் பெற்றுள்ளார். தொடர்ந்தும் முதல் இடத்தில் முரளிதரனும், பொலக் இரண்டாம் இடத்திலும், அக்தர் மூன்றாம் இடத்திலும், ஹார்மிசன் நான்காம் இடத்திலும் உள்ளனர். மெக்ரா ஐந்தாம் இடத்தில் உள்ளார்.

துடுப்பாட்டத்தில் ராகுல் ராவிட முதல் இடத்திலும், மத்தியூஹெய்டன், பிறையன்லாறா முறையே இரண்டாம் மூன்றாம் இடங்களைப் பெற்றுள்ளனர்.

## டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் 10ஆயிரம் ஓட்டங்களைக் கடந்தார்-லாரா



குறைந்த டெஸ்ட் போட்டிகளில் மேற்கிந்தியத்தீவு வீரர்பிரையன் லாரா 10ஆயிரம் ஓட்டங்களைக் கடந்தவர் என்ற சாதனையை ஏற்படுத்தினார்.

இங்கிலாந்து- மேற்கிந்தியத்தீவு அணிகளுக்கிடையேயான 3ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி மான்செஸ்டரில் நடைபெற்றது. இதில் மேற்கிந்தியத்தீவின் பிரையன் லாரா 2ஆவது இன்னிங்சில் 4பந்துகளில் 7ஓட்டங்கள் எடுத்தார்.

இதன் மூலம் லாரா டெஸ் போட்டிகளில் 10ஆயிரம் ஓட்டங்களைக்கடந்தார். லாரா 111 டெஸ்டில் விளையாடி10 ஆயிரம் ஓட்டம் எடுத்துள்ளார். இதில் 20 சதமும், 45 அரைச் சதமும் அடங்கும்.

10 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த 4ஆவது வீரர் என்ற பெருமையை லாரா பெற்றுள்ளார். கவாஸ்கர் (இந்தியா) ஆலன்போர்டர், ஸ்டீவ்வோ (அவுஸ்திரேலியா) ஆகியோர் இந்த ஓட்டங்களை ஏற்கனவே எடுத்துள்ளனர்.




## இந்தியாவுக்கு 2வெள்ளிப்பதக்கம்

எதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் இந்தியாவுக்கான முதலாவது பதக்கத்தை றத்தோர் பெற்றுக்கொடுத்துள்ளார்.

நேற்று நடைபெற்ற காற்ற முத்த குறிபார்த்து சுடும் போட்டியில் றத்தோர் வெள்ளிப்பதக்கத்தை வென்றெடுத்தார்.

தங்கப்பதக்கத்தை ஐக்கிய அரபு எமிரெட்ஸ் வீரரும் வெண்கலப்பதக்கத்தை சீன வீரரும் கைப்பற்றினர்.

இதேவேளை அம்பெய்தலில் றீனாக்குமாரி இந்தியாவுக்கு இரண்டாவது வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றுக் கொடுத்தார்.

## நீச்சல் புயல் இயன் தோப் புதிய உலகசாதனை படைத்தார்



எதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் அவுஸ்திரேலியாவின் நீச்சல் புயல் என வர்ணிக்கப்படும் இயன்தோர்ப் சாதனையுடன் கூடிய பதக்கத்தை வென்றுள்ளார்.

200 மீற்றர் நீச்சல் போட்டியில் இவர் மீண்டும் தங்கப்பதக்கத்தைப் பெற்று அவுஸ்திரேலியா சார்பாக 5 தங்கப்பதக்கத்தை வென்றெடுத்த ஒலிம்பிக்வீரர் என்ற சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

இறுதியாக இடம்பெற்ற போட்டியில் இந்தப் பதக்கத்தை வென்றெடுத்ததன் மூலம் இதுவரை ஐந்து தங்கங்களை இயன்தோப் வென்றெடுத்துள்ளார்.

## தூங்காத ஜப்பான் பிரதமர்




தங்கம் வென்ற ஜப்பான் ஜூடோ வீரர்களுக்கு அந்நாட்டின் பிரதமர் கொய்சுமி பாராட்டுத் தெரிவித்துள்ளார். 48கி.கி. பெண்கள் பிரிவில் ரியோகோ டானியும், 60கி.கி., ஆண்கள் பிரிவில் நொமுராவும் தலா ஒருதங்கம் வீதம் வென்றிருந்தனர். இதனால் பதக்கப் பட்டியலில் ஜப்பான் முன்னேறியது.

எதென்ஸ் சென்றுள்ள பிரதமர் உடனடியாக இருவருக்கும் பாராட்டுத் தெரிவித்தார். 'இருவரும் போட்டிகளில் பங்கேற்ற முதல்நாள் இரவில், தனக்குத் தூக்கம் வரவில்லை' என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார். இந்த ஒலிம்பிக்கில் இந்த இருவீரர்களும் ஜப்பான் சார்பில் முதலில் தங்கங்களைப்பெற்று கணக்கைத் தொடங்கினர்.

## இந்தியாவுக்கு வெற்றி

எதென்ஸ் ஒலிம்பிக் போட்டியின் நான்காம் நாளான நேற்று இந்திய ஹொக்கி அணி தென்னாபிரிக்க அணியை 4-2 என்ற கோல் எண்ணிக்கையில் வெற்றிபெற்றது.

ஆட்டத்தின் ஆரம்பத்தில் இரண்டு கோல்கள் போட்டு தென்னாபிரிக்க அணி முன்னணி வகித்த போதும் இந்திய அணி சிறப்பாக விளையாடி ஆட்டத்தின் இரண்டாவது பாதியில் 3 கோல்களைப் போட்டு வெற்றிபெற்றது.



50 மீற்றர் பிஸ்ரல் சுடும் போட்டியில் தங்கம் வென்ற ரஷ்யாவின் மிக்கேய்ல் நெஸ்ரூவ்



100 மீற்றர் பின்புற நீச்சல் போட்டியில் தங்கம் வென்ற அமெரிக்காவின் நற்றலில் ஹோக்லின்.



கொரியாவின் ஜின் யோஸ் ஓ, ரஷ்யாவின் மிக்கெயில் நெஸ்ரூவ், தென்னாபிரிக்காவின் கிம் ஜொங்சூ ஆகியோர் (இடமிருந்து வலமாக) ஆண்களுக்கான 50 மீற்றர் பிஸ் ரல் சுடும் இறுதிப போட்டியில் பதக்கங்களுடன்







பெட்மின்டன் போட்டியில் பங்கேற்ற சுவீடன் வீரர் மெக்னஸ் பீற்றர்சன்.




பெண்களுக்கான கூடைப் பந்தாட்டப்போட்டியில் ஜப்பானிய வீராங்கனை டேய்கோ ஒயாமா பந்தை கடத்துகிறார்.



துவிச்சக்கர வண்டிப் போட்டியில் பங்கேற்கும் ஜேர்மனியின் ஜான் உல்றிச் பயிற்சியின் போது முன்னேறிச்செல்கிறார்.



## சிந்தனைக்கு



வீரத்திலும் - தியாகத்திலும் - விடுதலை உணர்விலும் ஆண்களுக்கு எந்தவகையிலும் சளைத்தவர்கள் இல்லை. என்பதை எமது பெண் போராளிகள், தமது வீரசாதனைகள் மூலம் நிரூபித்துக்காட்டியுள்ளனர்.

தமிழீழ தேசியத்தலைவர்.


ஈழநாதம்
மக்கள் நாளிதழ்

யாழ். சாலை, கிளிநொச்சி. 18-08-2004



மின் அஞ்சல்
Daily@ eezhanatham. com

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948


## கட்டுக்கடங்காது.....

கட்டுக் கடங்காதவகையில் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பதற்கான சமிக்ஞைகள் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன. யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே என்பது போன்று விலைவாசி ஏற்றத்திற்கான அறிவிப்புக்கள் அரச தரப்பில் இருந்து வெளிப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

இதில் முக்கியமானதொன்றாக எரிபொருட்களின் விலை குறிப்பாக டீசல், பெற்றோல் என்பவற்றின் விலை அதிகரிப்புக்கள் உள்ளன. குறுகிய காலப்பகுதிக்குள் பெற்றோலின் விலை 11 ரூபாவால் (இருதடவைகளில்) அதிகரிக்கப்பட்டுள்ளது. டீசல் விலையும் ஏற்றம் கண்டுள்ளது.

ஆனால் இவ்விலை ஏற்றங்கள் மேற்கொள்ளப்பட்டபோதும் இன்னமும் பெற்றோல், டீசல் விலைகள் அதிகரிக்கப்படுதல் வேண்டும் எனப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வலியுறுத்துகின்றது. அதிலும் டீசலின் விலையேற்றம் அதிகப்படியாக இருக்க வேண்டும் எனக் கோருகின்றது. இவ்வாறு கோருவதற்கு சர்வதேச சந்தையில் பெற்றோலியப் பொருட்களின் விலை அதிகரித்துள்ளதாகக் காரணம் கூறப்படுகின்றது. இதேவேளை எரிவாயுவின்(காஸ்) விலையும் அதிகரிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையும் உள்ளது.

இந்தவகையில் பெற்றோலிய விலையேற்றமானது போக்குவரத்திற்கான செலவு நேரடியாகவே அதிகரிக்கக் கூடியது. இது பொருட்களின் விலை அதிகரிப்பதற்குக் காரணமாகிறது. அதாவது எரிபொருளின் விலையேற்றமானது நேரடியாகவே கேள்வி எதுவுமின்றி விலையேற்றத்திற்கு வழிவகுக்கக்கூடியது.

இது ஒரு புறம் இருக்க விவசாய உற்பத்திப் பொருட்களுக்கான மானியம் நிறுத்தப்படவுள்ளதாக அரசாங்கத் தரப்புத் தகவல்கள் கூறுகின்றன. ஒரு சில காலங்களுக்குள் இது தொடர்பான அறிவிப்பு வெளிவரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்நிலையில் மானியங்கள் நீக்கமும் பெற்றோலியப் பொருட்களின் விலையேற்றமும் சேர்ந்து அத்தியாவசியப் பொருட்கள் உட்பட அனைத்துப்பொருட்களின் விலைகளையும் கட்டுக்கடங்காத வகையில் அதிகரித்துச்செல்வதை எவராலுமே தடுத்து நிறுத்த முடியாது என்றே கூறலாம். ஏனெனில் இலங்கையின் பொருளாதாரமானது எத்தனை தூரம் மிக மோசமானதொரு கட்டத்தை எட்டியுள்ளது.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பும்-விலைவாசி ஏற்றமும் இவ்வாறாக இருக்கையில் புதிய ஐ.ம.சு. முன்னணி அரசாங்கமோ தேர்தல் வாக்குறுதிகளில் எவற்றையுமே நிறைவு செய்ய முடியாத இக்கட்டானதொரு நிலையில் சிக்கித்தவிக்கின்றது. குறிப்பாக விலைவாசி ஏற்றத்தைக் கட்டுப்படுத்துதல் ஊழியர் சம்பளத்தை 70 சதவீதத்தால் அதிகரித்தல் போன்ற வாக்குறுதிகளை நிறைவு செய்ய முடியாத நிலையில் ஆட்சியாளர்கள் உள்ளனர்.

அரசாங்கம் எதிர்கொள்ளும் இத்தகைய நெருக்கடிக்குப் பலகாரணிகள் இருப்பினும் கூட்டணி அரசாங்கத்திடம் ஒத்த கருத்தின்மையே காரணமாகும். அதிலும் குறிப்பாக இனப்பிரச்சினை விவகாரத்தில் இரு தரப்பிற்கும் இடையில் காணப்படும் இக்கட்டான போக்கே அடிப்படையாகும்.

சிறிலங்கா அரசு இன்று எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடியில் இருந்து விடுபட அதற்குப் பெரும் தொகை நிதி உதவி தேவையாகும். ஆனால் சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகள/ நிறுவனங்களில் பெரும்பாலானவை சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டாலே நிதியுதவி அளிக்க முடியும் என்ற நிலைப்பாடு கொண்டவையாக உள்ளன. இந்தியா ஓரளவு நிதி உதவி செய்யத் தயாராக இருப்பினும் சில கடுமையான விதிகளை விதித்துள்ளதனால் சிறிலங்கா அரசாங்கம் அதில் அதிக நாட்டம் கொள்ள இயலாதுள்ளது.

இத்தகையதொரு நெருக்கடியை ஐ.ம.சு முன்னணி அரசாங்கம் எதிர்கொள்வதற்கு ஜே.வி.பி.யின் நிலைப்பாடே காரணம் எனின் மிகையாகாது. ஏனெனில் தற்போதைய பொருளாதார நெருக்கடியைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகளை சனாதிபதியினைப் பின்தள்ளி சுதந்திரக்கட்சியினரால் மேற்கொள்ள முடியாது. உள்ளது. அதாவது ஜே.வி.பி.யின் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு எதிரான நிலைப்பாடு நிதி உதவிகள் கிடைப்பதற்கு இடையூறாகவுள்ளது.

இதன் காரணமாகவே விலைவாசி ஏற்றத்தைத் தடுத்து நிறுத்துவோம். அதற்கான காரணிகளை வேரோடு பிடுங்கி எறிவோம் எனக் கூக்குரலிட்ட ஜே.வி.பி யினர் இன்று வாய்மூடி மௌனியாகிவிட்டனர். விலை வாசி ஏற்றம் என்றதொரு பிரச்சினையே நாட்டில் இருப்பது போன்று காட்டிக்கொள்ளாது உள்ளனர். ஆனால் அவர்களுக்கு வாக்களித்தவர்களே செய்வதறியாது திகைத்து நிற்கின்றனர்.

# வட-கிழக்கு மாகாணசபைக்குரிய ஆளணியில்

# 18 ஆயிரம் வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை

### -துரைரட்ணசிங்கம் பா.உ. சனாதிபதிக்குக் கடிதம்

(திருகோணமலை)

வடக்குக்கிழக்கு மாகாணசபைக்குரிய ஆளணியில்சுமார் 18ஆயிரம் வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. இவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரட்ணசிங்கம் கேட்டுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் சனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில் எந்தத்துறைகளின் வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன என்ற விபரங்களையும் சமர்ப்பித்துள்ளார்.

வடக்குகிழக்கு மாகாணசபைக்கு 1997ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட ஆளணி51,748., 2000 ஆம் ஆண்டில் மேலும் 8286 பேரினால் அவ்வாளணி அதிகரிக்கப்பட்டது. இதன்படி மாகாணசபையின் தற்போதைய ஆளணி 60,034 ஆகும். ஆனால் 41,368பேரே தற்போது பணிபுரிகின்றனர். 18666 வெற்றிடங்கள் இன்னும் நிரப்பப்படாமல் உள்ளன. இலங்கை நிர்வாக சேவையில் 96 இடங்களும் இலங்கைப் பொறியியலாளர் சேவையில் 42 இடங்களும் இலங்கைக் கல்விநிர்வாக சேவையில் 320 இடங்களும் நிரப்பப்படாமல் உள்ளன. மாகாணசுகாதாரத்துறையில் 5255 இடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. அதிபர்களுக்குரிய 629 வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை. ஆசிரியர்களுக்குரிய மொத்த ஆளணி 27214. ஆனால் 24365பெரே பணிபுரிகின்றனர். 2849 வெற்றிடங்கள் இன்னும் நிரப்பப்படாமல் உள்ளன. 200 நூலகர்களுக்கான வெற்றிடங்கள் இன்னும் நிரப்பப்படவில்லை.

பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரட்ணசிங்கம் சனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தின் பிரதிகளை பிரதமர், பொதுச்சேவை ஆணைக்குழுத்தலைவர் மற்றும் பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கும் அனுப்பிவைத்துள்ளார். (25)

### -வாக்களிக்க அடையாள அட்டை கட்டாயமாக்கப்படின்

# 30 சதவீதமான மக்கள் வாக்களிக்கும் உரிமை இழப்பர்

(கொழும்பு)

தேர்தல் சட்டவிதிகளின்படி வாக்களிப்பின்போது தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்க வேண்டும் என்ற. திருத்தச்சட்டம் அமுலாக்கப்பட்டால் நாட்டிலுள்ள வாக்களிப்போரில் 33 வீதமானோரின் வாக்குரிமைகள் இழக்கப்படும் நிலை உருவாகும் என ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

இவ்வாறான உரிமைகளை இழக்கும் பிரிவினருக்கு ஆதரவாக மாற்று நடவடிக்கைகள் எதனையும் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படுமானால் அதனை ஐ.தே. கட்சி ஆட்சேபிக்காது என முன்னாள் சபாநாயகர் மைக்கல் ஜோசப் பெரேரா தெரிவித்துள்ளார்.

எவ்வகையிலும் தேர்தல் நடத்துவதற்கு அவசியம் ஏற்படாத நிலையில் ஐ.ம.சு.கூட்டணி அரசு 33 வீதமானோரின் வாக்குரிமையை பறிக்க திட்டமிடுவது ஏன் என்பது தமக்குப் புரியாதிருப்பதாகவும் இது தொடர்பாக அடுத்த மாத ஆரம்பத்தில் கட்சித்தலைவர்களுடன் உரையாட இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போது அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது

தேர்தலின்போது அடையாள அட்டை சமர்ப்பிக்கப்படுவது இன்றியமையாதது என்ற சட்டத்திற்கு தாம் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என்று கூறியதுடன் அந்த சட்ட மூலத்தை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் ஜெயராஜ் பார்ணான்டோப்புள்ளே அச்சுறுத்தியதையே எதிர்ப்பதாகவும் தெரிவித்தார். இதனால் பாதிப்புறுவோர்களுக்கு மாற்று வழிகளைக் கூறி அவ்வாறான சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்ததை தான் வரவேற்பதாக மைக்கல் பெரேரா தெரிவித்தார்.

அச்சந்திப்பின்போது ராஜித சேனாரத்ன கூறியதாவது தோட்டப்புறங்களில் வாழும் 30 வீதமானோர் அடையாள அட்டையில்லாதிருப்பதாகவும், வடக்கு-கிழக்கில் வாழும் பெரும்பாலானோருக்கு அடையாள அட்டை இல்லாதிருப்பதாகத் தெரிவித்தார்.

இந்தச்சட்ட மூலத்தை அவசரமாகக் கொண்டுவருவதால் சந்தேகத்துக்கிடமுள்ளது. அடையாள அட்டை தயாரிப்பில் விசேட அனுபவம் பெற்றிருப்போர் இவ்வரசுக்குள் செயற்படுவதால் தேர்தல் நடைபெறவுள்ள நாளுக்கு முதல் நாளே வீடுவீடாக சென்று போலி அடையாள அட்டைகளை விநியோகித்து தமக்கு போதிய ஆதரவைத் திரட்டிக் கொள்வரென சேனநாயக்க கூறியுள்ளார்.

# மு.கா.தலைவருடன் இணைந்து செயற்பட ஏப்பந்தம்

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கிமுக்கும் மற்றும் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்ட ரிசாத் பதியுதீன் மற்றும் மஜீத் ஆகியோரும் இணைந்து செயற்பட முடிவெடுத்துள்ளனர்

இது தொடர்பில் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா இதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வந்தது இதன் அடிப்படையில் மூவரும் தமக்கு இடையிலான வேற்றுமைகளை மறந்து செயற்பட இணக்கம் காணப்பட்டுள்ளது

இது குறித்து ஜம்மியத்துல் உலமா அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

## 30இற்கு மேற்பட்டோர்மீது விசாரணை

(கொழும்பு)

பெலியத்தவில் சென்ற வியாழன் மரணவீடொன்றில் நால்வர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக முப்பதிற்கும் மேற்பட்டோர் விசாரணக்கு உட்படுத்தப்பட்டதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இப்படுகொலைகள் தென்பகுதி பாதாள உலகக்குழு வொன்றினாலேயே மேற்கொள்ளப்பட்டதாக தம்மால் தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ்தரப்பு கூறியுள்ளது.

# இன்று கற்றாக் சத்திரசிகிச்சைக்கு தெரிவு செய்யப்பட்டோர் விபரம்

கண்டாவளைப் பிரதேசத்தைச் சேர்ந்த 30 கற்றாக் நோயாளர்களுக்கான சத்திர சிகிச்சை இன்று புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவ மனையில் நடைபெறவுள்ளதாகக் கிளிநொச்சி மாகாணசுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்திய மூர்த்தி தெரிவித்துள்ளார்.

இவர்களுக்கான கண்பரிசோதனைகள் 31.07.2004 அன்று தர்மபுரம் வைத்தியசாலையில் டாக்டர் (திருமதி) க.எழுமதி அவர்களால் மேற்கொள்ளப்பெற்றது. அன்றைய தினம் சத்திரசிகிச்சைக்கு பரிந்துரைக்கப்பட்டவர்கள், தமக்கான சிகிச்சையைப்பெற புதுக்குடியிருப்புப் பொன்னம்பலம் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு இன்று தவறாது செல்லுமாறு வேண்டியுள்ளார்.

சிகிச்சை பெறவுள்ள 20பேரின் விபரம் வருமாறு:-

சின்னத்தம்பி குமாரசாமி(58) தர்மபுரம்மூக்கன் பெருமாள்(60) தருமபுரம்கிருஷ்ணபிள்ளை இலட்சுமி(74) தருமபுரம்.முத்துச்சாமி திருமால்(78) கட்டைக்காடு.நல்லையா செல்லம்மா(64) நெத்தலியாறு.சின்னத்தம்பி மருதப்பு(70) தருமபுரம்.தம்பையா சின்னத்தம்பி(50) மயில்வாகனபுரம். அன்னம் நாகேந்திரன்(44) மயில்வாகனபுரம்.ஞானப்பிரகாசம் சின்னம்மா(65) வெலிக்கண்டல். ஆறுமுகம் உத்தமி(60) உழவனூர். சுப்பிரமணியம் பிரதீப்(14) மயில்வாகனபுரம் ஜெயகுலநாதன்நிமலா(27) புன்னைநீராவி.நவரட்ணம் இலட்சுமி (65) தருமபுரம்.வைத்திலிங்கம் பரமேஸ்வரி(55) தருமபுரம்.ஆறுமுகம் வள்ளியம்மா(68) விசுவமடு.ஞானசேகரம் விசித்திரா(22) உழவனூர்.பரமகிருஷ்ணன் கிருஷ்ணமோகன் (14) பெரியகுளம்.முத்துச்சாமி சரஸ்வதி(57) தருமபுரம்.முருகன் கிருஷ்ணன் (58) வெலிக்கண்டல். கந்தையா செல்வரட்ணம்(48) வெலிக்கண்டல். (சோ,கு)

## இராணுவ..

அங்கு றோலர் படகு இருந்தது. டிங்கிப்படகும் இருந்தது. இவற்றைக் கடற்படைக் கப்பல் பார்த்தது அவ்வளவுதான்.

கடற்படைக் கப்பலில் எங்களின் ஆள் ஒருவரும் இருந்தார் ஆனால் அவர்கள் எதை இறக்கினார்கள் என்பது தெரியவில்லை என்றார்.

இதேவேளை நீங்கள் சம்பந்தப்பட்ட படகைச் சென்று பார்த்தீர்களா எனக் கேட்டபோது.

போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் அந்தக் கடற்படைக்கப்பலில் இருந்தார்கள் அந்த இடத்தை நோக்கி எங்கள் றோலர் படகொன்றும் சென்று கொண்டிருந்தது என்றார்.

அந்தப் பகுதிக்குள் நுழையவும் றோலர்ப் படகை சோதனை இடவும் புலிகள் உங்களுக்கு அனுமதி மறுத்துவிட்டதாக இராணுவம் கூறுகின்றதே எனக் கேட்டபோது

அது சரியான தகவல் இல்லை அந்தப் பகுதியில் நிலக்கண்ணி வெடி அபாயம் இருப்பதாக எங்களுக்கு எச்சரிக்கை வந்தது. அப்படி இருக்க எனது ரோந்துக் குழுவை அப்பகுதிக்கு அனுப்ப நான் விரும்பவில்லை அதனால் தான் அவர்கள் அங்கு செல்லவில்லை என்றார். டொன் புறுவ் ஹொவ்டே

இது தொடர்பாக நீங்கள் என்ன நடவடிக்கை எடுக்க உள்ளீர்கள் எனக் கேட்டபோது. தற்போதைக்கு ஒன்றும் செய்யப்போவதில்லை எனக் கூறிய அவர் கண்காணிப்புக்குழுவினரின் படகில் இருந்து றேடியோ மூலம் தகவல்கள் வரும் என நாங்கள் பார்த்துக்கொண்டிருக்கிறோம் ஆனால் அவர்களிடமும் இருந்து குறிப்பிடும் படியான தகவல் எதுவும் இதுவரை வரவில்லை என்றார்.

## பெற்றோலிய...

பட்சத்தில் மீண்டும் தாம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடப் போவதாகவும் ஊழியர்கள் எச்சரித்துள்ள்னர். ஊழியர்களின் பெரும்பாலானவர்கள் அங்கம் வகிக்கும் தொழிற்சங்கம் அரசாங்கக் கட்சியான ஜே. வி. பி.யின் தொழிற் சங்கமாகும். (32)

## எதென்ஸ் ஒலிம்பிக் -2004 பதக்கப்பட்டியல்

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| சீனா | 10 | 4 | 2 | 16 |
| அமெரிக்கா | 5 | 6 | 5 | 16 |
| அவுஸ்திரேலியா | 6 | 3 | 5 | 14 |
| ரஷ்யா | 2 | 5 | 3 | 10 |
| ஜப்பான் | 6 | 2 | 1 | 9 |
| பிரான்ஸ் | 2 | 2 | 4 | 8 |
| இத்தாலி | 2 | 3 | 2 | 7 |
| உக்ரேன் | 3 | 1 | 1 | 5 |
| நெதர்லாந்து | 0 | 2 | 3 | 5 |
| ஜேர்மனி | 1 | 2 | 1 | 4 |
| தென்கொரியா | 1 | 1 | 2 | 4 |
| கிரீஸ் | 2 | 0 | 1 | 3 |
| துருக்கி | 2 | 0 | 1 | 3 |
| ஹங்கேரி | 1 | 1 | 1 | 3 |
| தாய்லாந்து | 1 | 0 | 2 | 3 |
| வடகொரியா | 0 | 2 | 1 | 3 |
| ருமேனியா | 1 | 0 | 1 | 2 |
| ஆஸ்திரியா | 0 | 2 | 0 | 2 |
| போலந்து | 0 | 2 | 0 | 2 |
| இங்கிலாந்து | 0 | 1 | 1 | 2 |
| தென்னாபிரிக்கா | 1 | 0 | 0 | 1 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | 1 | 0 | 0 | 1 |
|  | 0 | 1 | 0 | 1 |

## நாட்டுப்...

கிளிநொச்சி தூயவன் அரச அறிவியல் கல்லூரியில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. இங்கு தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் உட்பட பொறுப்பாளர்கள், போராளிகள், பொதுமக்கள், அரச அரசசார்பற்ற நிறுவனங்களின் பணியாளர்கள் எனப் பெருமளவானோர் வருகை தந்து அஞ்சலி செலுத்தினர். இங்கு நடைபெற்ற இவ் அஞ்சலி நிகழ்விற்கு தமிழீழ மாணவர் அமைப்பு நிர்வாகப் பொறுப்பாளர் முருகு பாரிமகன் அவர்கள் தலைமை தாங்க தமிழீழ விடுதலைப்புலிகளின் சமாதான செயலகத்தைச் சேர்ந்த தம்பி அப்பா அவர்கள் அஞ்சலி உரையினை நிகழ்த்தினார். இங்கு நடைபெற்ற அஞ்சலி நிகழ்வினைத் தொடர்ந்து வித்துடல் யாழ்ப்பாணம் வேலணை மேற்கு புளியங்கூடலில் உள்ள இவரின் இல்லத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டது.

அங்கு மாலை 2.30 மணியளவில் புளியங்கூடல் பொது மண்டபத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. அங்கு புளியங்கூடல் பாடசாலை அதிபர், யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பருதி ஆகியோர் நினைவுரைகளை நிகழ்த்தினர். பெருமளவான மாணவர்கள், மக்கள், போராளிகள் எனப் பலரும் மலர் அஞ்சலி செலுத்தினர். அதனைத் தொடர்ந்து மாலை 3.30 மணியளவில் வேலணைப் பிரதேச செயலகத்தில் அவரது வித்துடல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அஞ்சலிக் கூட்டமும் இடம்பெற்றது. வேலணைப் பிரதேச செயலாளர். யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் செம்மணன் ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்தினர் பெருமளவிலான மக்கள், மாணவர்கள் எனப் பலரும் அஞ்சலி செலுத்திக்னர். அதனைத் தொடர்ந்து அவரது வித்துடல் அவரது இல்லத்திற்கு எடுத்துவரப்பட்டு அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. இன்று இறுதி கிரியைகள் முடிந்ததும் மக்கள் அஞ்சலிக்காக யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் வைக்கப்பட்வுள்ளது. இதில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், விடுதலைப்புலி உறுப்பினர்கள்,பொதுமக்கள், மாணவ்ர்கள் எனப்பலரும் கலந்து கொண்டு அஞ்சலிசெலுத்தவுள்ளனர்.

## நோர்வே...

எனினும் தமிழீழ விடுதலைப் புலிகள் கருத்துக்கூறுவதில் பொறுமையைக் கடைப் பிடிக்கவேண்டும் என அரசாங்கத்தின் சமா தான செயலர் ஜயந்த தனபால கோரியுள்ளமை இங்கு குறிப்பிட்டத் தக்கது. (32)

## புலிகளின்...

நேரில் சந்திக்க மிகவும் ஆவலாக இருப்பதாகவும் கூறியுள்ளார்.

இதேவேளை இந்தச் சந்திப்பு வெறுமனே கைகுலுக்கும் நோக்கத்திற்காக அல்ல எனவும் தெரிவித்த அவர் சமாதான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டு அது முன்னேற்றகரமாக அமையுமானால் நிச்சயமாக ஒரு வருடத்தில் தாம் சந்திக்க வேண்டி ஏற்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை விடுதலைப் புலிகளின் உட்கட்சிப்பிரச்சினை நாட்டின் பாதுகாப்பிற்கும் நலன்களுக்கும் பாதகமாக அமையுமானால் தனது படையினரைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் செல்வதற்கு தான் உத்தரவிடவேண்டிய நிலை ஏற்படுமெனவும் அவர் கூறியுள்ளார்.

அதேவேளை நாட்டின் தேசிய நலனுக்காகத் தான் எதனையும் செய்யத் தயங்கமாட்டேன், பின் நிற்கமாட்டேன் எனவும் கூறியுள்ளார்.

இதேவேளை சனாதிபதியின் இந்தக்கூற்றானது விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சு வார்த்தை உடனடியாக ஆரம்பிக்கப்படவேண்டியதன் இக்கட்டான நிலையில் தனது அரசு இருப்பதை உணர்ந்ததன் வெளிப்பாடே இது என அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

## சமாதானப்...

தில் இவை தொடர்பான பேச்சு வார்த்தையினை நடத்தலாமென அரசாங்க சமாதான செயலகத்தின் பணிப்பாளர் ஜயந்த தனபால அவர்கள் தெரிவித்துள்ளார். விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளின் அடிப்படையில் பேச்சுவார்தைகளை ஆரம்பிக்கக் கூடாது என்ற நிலைப்பாட்டில் அரசின் பங்காளிகளான மக்கள் விடுதலை முன்னணியினர் உறுதியாக உள்ளனர். இந்த நிலையில் சமாதானப்பேச்சுவார்தைகளை எப்படியாவது ஆரம்பிப்பதன் மூலம் சர்வதேச நிதி உதவிகளைப் பெற்று விடுவதற்கு சனாதிபதி கடும் பிரயத்தனங்களை மேற் கொண்டுவருகின்றார்.

இருந்த போதிலும் அரசாங்கம் தயாரித்துள்ள இடைக்கால நிர்வாக யோசனைகளில் விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்ட பல முக்கியமான விடயங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளன. காணி அதிகாரம், நிதி பாதுகாப்பு தொடர்பான முக்கிய அம்சங்கள் மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இந்த நிலையில் சமாதான ஏற்பாட்டாளர்களின் இலங்கை விஜயம் ஒத்திவைக்கப்பட்டுள்ளமை சமாதான முயற்சிகளில் தோன்றியுள்ள தேக்க நிலையை மேலும் உறுதிப்படுத்தியிருப்பதாகவும் இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. நோர்வே தரப்பினூடாக அரசாங்கத்தின் இடைக்கால நிர்வாக சபை யோசனைகள் விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிவைக்கப்படவிருந்தமை குறிப்பிடத்தக்கது. (32)


## சாவு அறிவித்தல்



## விசுவலிங்கம் நடராஜா

(ஓய்வு பெற்ற விவசாய உத்தியோகத்தர்)

யாழ்ப்பாணம் அரியாலையைப் பிறப்பிடமாகவும் ஜெயந்திநகர், கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட விசுவலிங்கம் நடராஜா (ஓய்வு பெற்ற விவசாய உத்தியோகத்தர்) 17.08.2004 நேற்று மாலை 6 மணியளவில் காலமானார். அன்னார் காலம் சென்ற விசுவலிங்கம் தங்கரத்தினத்தின் அன்பு மகனும், காலம்சென்ற கார்த்திகேசு இராசம்மாவின் அன்பு மருமகனும், ஞானேஸ்வரியின் அன்புக்கணவரும், சாந்தினி, காலம்சென்ற சிவகுமாரன், சுபாஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும், மகாதேவா, காலம்சென்ற கல்யாணி, சிவநாதன் ஆகியோரின் மாமனாரும், திவ்யா, தாமரா, பகலவன், புகழ்நிலா, தமிழ்முகிலன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று மாலை (18.08.2004) பி.ப 4 மணிக்கு இல – 228 ஜெயந்திநகரிலுள்ள தற்காலிக இல்லத்தில் இருந்து தகனக்கிரியைக்காக திருநகர் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:-
குடும்பத்தினர்.

(4905)



## சூரிய மின்கலம் விற்பனைக்கு

செல்சோலர் லங்கா லிமிட்டட்டின் முகவராகச் செயற்படும் வவுனியா வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தில்கீழ்க் குறிப்பிடப்படும் விலைகளில் சோலர் பெற்றுக் கொள்ளலாம் என்பதைச் சகல வாடிக்கையாளர்களுக்கும் அறியத்தருகின்றோம். 3 பல்ப் செல்சோலர் கையிருப்புச் சொற்பமே உள்ளதால் உங்கள் தேவைக்கு முந்துங்கள். குறைந்த முதலீட்டு டன் நிரந்தரமாக இருள் நீக்கி ஒளி ஏற்ற இன்றே நாடுங்கள்.

| | | |
|---|---|---|
| 3பல்ப் | உடையது | 19000.00 |
| 4பல்ப் | உடையது | 29000.00 |
| 7பல்ப் | உடையது | 46000.00 |

வவுனியா
வடக்குப்.ப.நோ.கூ..சங்கம்
நெடுங்கேணி.

(சி-10077)



## புதுக்கடை திறப்புவிழா

அன்புடையீர்:

புதுக்குடியிருப்பில் எம்மால் புதிதாக அமைக்கப்பட்ட தீபன் மருந்தகம் (தீபன்) 20.08.2004 அன்று காலை 8.10 மணிக்கு புதுக்குடியிருப்பு வணிகர் கழகத் தலைவர் பெ. கந்தசாமி அவர்களால் திறந்துவைக்கப்படவுள்ளது.

ஆதலால் அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

தீபன் மருந்தகம்,
வைத்தியசாலை முன்பாக,
புதுக்குடியிருப்பு.

தங்கள் நல்வரவை நாடும்
நா.நாகேந்திரம் குடும்பம்
(தீபன், அப்பா)

(சி-9180)

குறிப்பு:- எம்மிடம் தமிழ், ஆங்கில மருந்து வகைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.